தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

. மலர் 4 | சென்னை | 12-10-57 | சனிக்கிழமை | இதழ் 15

பேராசிரியர் டாக்டர் ராசமாணிக்கனார் அவர்கள் கடந்த இரண்டாண்டு காலமாக ஒரு கருத்தை வெளியிட்டு வருகிறார். அவர் கலந்துகொள்ளும் கூட்டங்களில் அந்தக் கருத்தை தவறாது சொல்லி வருகிறார். **"தமிழ்ப் புலவர்கள் தமிழைக்காக்க முன் வரவில்லை என்று சில இடங்களில் பேசப்படுகிறது; உண்மை தான்; தமிழைக் காக்க நாங்கள் வந்தால் இன்றைய ஆட்சியாளர்கள் எங்களுக்கு ஒரு கருப்புச் சட்டையை மாட்டி விடுகிறார்கள்"** என்பது தான் டாக்டர் அவர்கள் அடிக்கடி பேசும் பேச்சாகும். சிலருக்கு இது சந்தேகமாக இருந்தது. வேறு சிலர் டாக்டர் இவ்வாறு பேசுவது குறித்து ஆச்சரியப்பட்டார்கள். அவ்வாறு சந்தேகப்பட்டவர்களும், ஆச்சரியப்பட்டவர்களும் இன்று தங்களைத் தாங்களே திருத்திக் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் அந்தப் போராட்டம் குறிப்பிட்ட அளவு வெற்றியைத் தரவில்லை. காரணம் ஜனநாயகத்தின் அம்சங்கள் தனித்தனியாகத் துண்டிக்கப்பட்டிருப்பது தான். அடிமரத்தை அசைத்தால் நுனிமரம் ஆடுவதுபோல், மோட்டார் சக்கரத்தின் காற்றைத் திறந்துவிட்டால் மோட்டார் நகரமுடியாத நிலை பெற்று விடுவதுபோல் இன்றைய ஜனநாயக அமைப்பு இல்லை. தேர்தல் நேரத்திலே மக்களிடம் அதிகாரம் இருக்கிறது. அதற்குப் பிறகு அந்த அதிகாரம் கைமாறி விடுகிறது. பொதுமக்கள் வெறும் 'மரஏணி'களாகத்தான் ஜனநாயகத்தில் மதிக்கப்படுகிறார்கள். அதனால்தான் தேர்ந்தெடுத்தவர்களின் அழுகுரலை - குமுறலை - வேண்டுகோலை தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மதிப்பதில்லை. சிரசிருக்க வாலாடுவது போல் தேர்ந்தெடுத்தவர்களை தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் மிரட்டுகிறார்கள்.

சிரசிருக்க வாலாடுகிறது!

கொள்ளும் விதத்தில் இன்றைய அரசியலாரின் மனப் பாங்கு வளர்ந்துவிட்டது. நாம் யாரை நொந்துகொள்வது? பெற்றவள் அழுகிறாள், பேணிக்காத்தவர் துடிக்கிறார்; தேர்ந்தெடுத்த பொதுமக்கள் எரிமலையாகிவிட்டிருக்கிறார்கள். ஆனால் பிள்ளை அவைக் கூடத்துக்குள் போய் விட்டானே! அவனை யாரால் என்ன செய்ய முடிகிறது! தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்கும், ஜனநாயகத்தின் மேன்மாடத்திற்கும் எப்போதும் சங்கிலித் தொடர்பு இருக்கும் வகையில் இந்த நாட்டில் ஜனநாயகக் குடியரசு அமையாத காரணத்தால் ஏற்பட்ட விரிவான ஓட்டைதான் இது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

தமிழகத்தைப் பொருத்த வரையில் அண்மையில் நடந்தேறிய எல்லா சர்வகட்சிப் போராட்டங்களும் தமிழ்ப் பெருங்குடி மக்களின் பேராதரவைப் பெற்றதாகும். சிறப்பாக, காங்கிரசுக்கு வாக்களித்தோர் கூட அந்தப் போராட்டங்களில்

இன்றையதினம் அத்தகைய இக்கட்டான நிலையில் தமிழும் தமிழகமும் சிக்கித் தவிக்கின்றன. தமிழ்நாட்டிலே வாழ்கின்ற - தமிழர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தமிழையே ஒழித்துக்கட்ட 'பெருமுயற்சி' எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

எதிர்க்கட்சிகள் அத்தனையும் இந்தி பொதுமொழியாவதை விரும்பவில்லை. காங்கிரஸ் எம். எல். ஏக்கள், எம். பி.க்கள் தவிர மற்ற காங்கிரஸ்காரர்கள்கூட இந்தி மொழியை எதிர்க்கிறார்கள். பக்தர்கள் எதிர்க்கிறார்கள்; பண்டாரச்சந்நிதிகள் எதிர்க்கிறார்கள்; ஆச்சாரியார் எதிர்க்கிறார். இவர்களது எதிர்ப்புகளையும் தாண்டி இந்தியை ஆதரித்துப் பேச இன்றைய மந்திரிகளுக்கும் மற்றவர்களுக்கும் என்ன யோக்யதை இருக்கிறது என்று யாருக்கும் புரியவில்லை.

அதுவும், மந்திரி சுப்ரமணியம் வரிந்து கட்டிக்கொண்டு ஆதரித்துப் பேசுகிறார். இந்தியில் அவர் 'விசாரத்' பட்டம் பெற்றவரைப் போலவும், மற்றவர்களுக்கு தமிழே தெரியாதது போலவும் அவர் உருகி உருகிப் பேசுகிறார். எந்தக் கூட்டமானாலும் - பள்ளிக்கூடத் திறப்பு விழாவானாலும் சரி; பஜனைக்கூட துவக்க விழாவானாலும் சரி அங்கேயெல்லாம் இந்திப் பிரச்சினைதான். இந்திப் பிரச்சினையை எடுத்தால் தானே தி. மு. கழகத்தைச் சாட முடியும்! அந்த முறையிலேயே கடந்தவாரம் ஒரு 'பேருண்மை'யை அவர் வெளியிட்டிருக்கிறார். எழுதப் படிக்கத் தெரிந்த தமிழர்கள் அனைவருமே அதுகண்டு சிரிக்கிறார்கள். இவர் மந்திரியா? அதுவும் கல்வி மந்திரியா? நிதிக்கும் மந்திரி, நீதிக்கும் மந்திரி இவர்தானா? என்று வெட்கித்துச் சிரிக்கிறார்கள்.

அமைச்சர் கலந்துகொண்டது ஒரு மலிவுப்புத்தக வெளியீட்டு விழா. கலந்துகொண்ட அமைச்சர் பேசவேண்டியது தமிழைப் பற்றி! தமிழ் இலக்கியத்தைப் பற்றி! தமிழுக்குத் தரவேண்டிய பாதுகாப்புப்பற்றி! **ஆனால் அமைச்சர் பேசியதோ தி. மு. க. பற்றியும்! நாஸ்திகம் பற்றியும்! "தமிழ் கெட்டது இன்று நாஸ்திகம் பேசுபவர்களால்தான்"** என்று அவர் பேசியிருக்கிறார். பேசியவர் மந்திரியாயிற்றே என்று நாம் வருந்தவில்லை. மந்திரி பதவி காளான் போன்றது. அது மழை பெய்தால் முளைக்கும், வெய்யில் பட்டால் கருகிவிடும். சுப்ரமணியம் பட்டம்பெற்ற வக்கீலாயிற்றே என்றுதான் நமக்குக் கவலை. வக்கீல்கள் ஒரு கருத்தை வெளியிட்டால் அந்தக் கருத்தை யாரும் எந்தக் கோணத்திலிருந்தும் உடைக்கமுடியாதபடி உறுதிப்பாட்டுடன் தெரிவிக்கவேண்டும். அவ்வாறின்றி, ஒரு வழக்கறிஞர் பேசுவாரானால் அதுவும் அரசியல் வாழ்வில் மிதப்பவரானால், அவருக்கு வக்கீல் தொழில் நடத்த ஆற்றலில்லாமல்தான — வாதத்திறமை அறவே இல்லாததால்தான் அவர் அரசியலுக்கு வந்திருக்கிறார் என்று முடிவு கட்டுவதைத் தவிர வேறு வழியில்லை.

தமிழ் கெட்டது நாஸ்திகர்களால்தான் — தி. மு. கழகத்தை மனதிலே கொண்டு தொடுத்த இந்தப் பாணம் தன்னைத்தானே எதிர்த்துப் பாயும் என்று [illegible] உணரவில்லை. வாதிக்கு [illegible]

— 8ம் பக்கம் —

ராஜஸ்தான் ரோஜா!

"இளவரசி!"

"......... ......"

"இளவரசி"-மீண்டும் அழைத்தாள் தோழி. ஆனாலும் இளவரசி அகிலாவின் எண்ணமெல்லாம் எங்கோயோ இருந்தது. மெல்ல நடந்து அருகே சென்ற தோழி, படுக்கையில் சாய்வாகப் படுத்திருந்த அகிலாவின் தோள்களைப் பிடித்தாள். அதுவரை ஏதோ எண்ணங்களில் ஆழ்ந்திருந்த இளவரசி தோழியின் பக்கம் திரும்பினாள். அவளது முகம் சலனமற்றிருந்தது.

காலைநேரம். ராணாவின் மாளிகையில் உள்ள உப்பரிகையில் உட்கார்ந்து, கீழே உள்ள ஏரியின் நீரையே பார்த்துக்கொண்டிருந்தாள் அகிலா. உதய சூரியனின் ஒளி ஏரியின் நீரிலே பட்டு, ஒளி வீசிக்கொண்டிருந்தது. மாளிகையின் பிரதிபிம்பம் ஏரியின் நீரிலே பிரதிபலித்தது; பளிங்கு மண்டபத்திலே கட்டப்பட்டிருந்த பட்டுப் படுதாக்கள், காற்றின் வேகத்திலே "படபட"வென்று அசைந்தாடிக் கொண்டிருந்தன.

இளவரசி தோழியையே மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். "என்னம்மா!-ஊமையாகிவிட்டீர்கள்?" தோழி கேட்டாள். "அப்பாவும், அண்ணனும் படையோடு வேட்டைக்குப் போய்விட்டார்களே அவர்கள் திரும்பி வரும்வரை பொழுதை எப்படிக் கழிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தேன்" என்றாள் இளவரசி.

"அப்பாடி! எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்த ஆழ்ந்த சிந்தனையோ என்று புரியாமல் தவித்தேன்!"

"எதிரியின் கோட்டையை பிடிக்காவிட்டாலும், நமது கோட்டையைப் பாதுகாத்துக் கொண்டால் போதாதா?"-பேசிக்கொண்டே அகிலாவும் தோழியும் மாளிகைக்குள்ளே சென்று மறைந்தனர்.

★

உயர்ந்த அரபிநாட்டுக் குதிரைகள் மீதமர்ந்து, ராணா மகாதேவ சிம்மனும், அவனது மைந்தனும், தளபதியும், காவலர்களும் காட்டினுள்ளே வேட்டைக்குப் போய்க் கொண்டிருந்தனர், தளபதியிடம் "மொகலாயத் தளபதி அமீர் கானுடைய கொட்டத்தை அடக்க நம்மால் முடியவில்லையே. நான் மட்டும் வாலிபப் பருவத்தினனாய் இருந்தால், அவனோடு தனிப்போர் புரிந்தே வென்றுவிடுவேன்." என்றான் ராணா.

"இல்லை அரசே! அவர்களிடம் படைபலம் அதிகம். அதுமட்டுமல்ல அவர்களிடம் புதுமுறை ஆயுதமான துப்பாக்கியும் இருக்கிறது. ஆகவேதான் அவர்களை வெற்றி கொள்வது கடினமாய் இருக்கிறது."-தளபதி கூறினான்.

நாட்டின் நிலை குறித்து அவர்கள் பேசிக்கொண்டே புரவிகளை நடத்திச் சென்றனர். புதர்கள் அடர்ந்த ஒரு பக்கம் வந்ததும், துப்பாக்கிகள் ஏந்திய நூற்றுக்கணக்கான வீரர்கள் அவர்களைச் சூழ்ந்துகொண்டனர். ராஜபுத்திர வீரர்களின் கையில் உறையில் கிடந்த வாட்கள் மின்னின. ரத்தம் வாட்களில் படிந்தது. ஆனாலும், அவர்கள் சிலர்; எதிர்த்தவர்களோ துப்பாக்கி ஏந்திய பல நூறுபேர். எல்லோரும் சிறை பிடிக்கப்பட்டு மலைச்சரிவிலே அமைக்கப்பட்டிருந்த மொகலாயர்களின் கோட்டைக்கு விலங்கிட்டு இழுத்துச் செல்லப்பட்டனர்.

ராணாவின் மாளிகையில் இருந்த எல்லோரும் கலவரமடைந்து கிடந்தனர். வேட்டைக்குச் சென்ற மன்னனும், மற்றவர்களும் மாலைப் பொழுதாகியும்கூடத் திரும்பி வராதது, அரண்மனையிலே உள்ளவர்களின் நெஞ்சத்திலே அச்சத்தை உண்டாக்கிவிட்டிருந்தது. கோட்டையின் மதிலிலே ஆயுதமேந்திய வீரர்கள் நிறுத்திவைக்கப்பட்டனர். அகழியையும் கோட்டையையும் இணைக்கும் தூக்குப்பாலம் மூடப்பட்டது. இளவரசி அகிலா உப்பரிகையில் நின்று அவர்கள் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

தூரத்திலே கரும்புள்ளிபோல தோன்றிய ஓர் தோற்றம், கோட்டையை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தது. அருகே வர வர அது ஒரு குதிரைவீரன் என்பது தெளிவாயிற்று. கவசமணிந்த அக் குதிரைவீரன், கையிலே வெள்ளைக் கொடி ஏந்தியிருந்தான்-கோட்டையின் வாசலுக்கு அவன் வந்ததும் தூக்குப்பாலம் இறக்கிவிடப் பட்டது. ராணியிடம் அழைத்து வரப்பட்டான் அவ்வீரன். அரண்மனையிலிருந்த அத்தனை பேரும் ராணியைச் சூழ்ந்துகொண்டனர். குதிரைவீரன் கையிலே சிறியதோர் பெட்டி இருந்தது. ராணிக்கு அருகே சென்ற குதிரைவீரன் அவள் முகத்தருகே பெட்டியைக் கொண்டுபோய்த் திறந்து காட்டினான். உள்ளேயிருந்ததைப் பார்த்ததும் ராணி, "ஆ" என விறிட்டலறினாள். ஆமாம்! பெட்டியிலே ராணாவின் கைவிரல்கள் இரண்டு துண்டித்து வைக்கப்பட்டிருந்தன. ஒரு விரலில் ராணாவின் முத்திரை மோதிரம் இருந்தது.

ராணியின் முகம் வெளுத்து விட்டது. உதடுகள் நடுங்கிக் கொண்டிருந்தன. அதைக்கண்ட குதிரைவீரன் பெருமிதத்தால் சுற்றியிருப்போரை ஒரு முறை பார்த்துக் கொண்டான். பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "இளவரசி அகிலா உடனே அமீர்கானின் ஜனானாவுக்குப் புறப்பட்டாக வேண்டும். இளவரசி இங்கே தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும், ராணாவின் அங்கங்கள் இப்படித்தான் சிதைக்கப்படும்! இது தளபதி அமீர் கானின் கட்டளை" என்றான் குதிரைவீரன். அந்த மண்டபம் அவன் பேசிய கொடூர மொழிகளை மீண்டும் எதிரொலித்தது. என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்து நின்றனர் எல்லோரும். ஒரு வினாடிதான் அமைதி அங்கே நிலவியது. கண்கள் கோபத்தால் சிவக்க, ஆத்திரத்தோடு "ராணாவின் உயிருக்காக அகிலாவைப் பணயம் வைக்கத் தயாராயில்லை. 'மானமிழந்து மண்ணில் வாழமாட்டாள் ராஜபுத்ர மங்கை' என்று சொல். 'மானத்தைக் காக்க மரணத்தோடு போராடவும் மங்கையர் கூட்டம் வாளோடு காத்திருக்கிறது உதயபுரியிலே, என்று எடுத்துச்சொல் போ! 'புள்ளிமான் கூட்டத்தை பாயும் புலிகளாக மாற்றிவிட வேண்டாம்' என்று மமதை பிடித்த உன் தளபதிக்கு சொல்லு! இம்! போ!" எனப் பெண்புலி போலச் சீறினாள் ராணி.

போகத் தயாரான குதிரைவீரனிடம், சோகபிம்பமாய் நின்றுகொண்டிருந்த அகிலா "தளபதி அமீர்கானிடம் 'அகிலா சிவிகையில் புறப்பட்டுவிட்டாள்' என்று சீக்கிரமாகப் போய்ச் சொல்!" என்று கூறினாள். இதுகேட்ட ராணி வேகமாக ஓடிவந்து, அவளது வாயைப் பொத்தினாள். கண்களில் நீரோட, தன் தாயைப் பார்த்துகொண்டிருந்தாள் அகிலா. "என்ன காரியம் செய்யத் துணிந்தாய் அகிலா? மகளின் மானத்தை விலையாக்கி உயிர் பிழைத்தான் மகாதேவசிம்மன், என்ற பழிச் சொல்லை, உன் தந்தைக்குத் தேடித் தரப்போகிறாயா? மகளே......"

'அம்மா! ஆளப்பிறந்த என் அண்ணனையும், அப்பாவையும் எனக்காகப் பலியிட நினைக்கிறீர்களா? அவர்கள் இரண்டுபேரும் போய்விட்டால், மொகலயர்கள் இந்த நாட்டைச் சுடுகாடாக்கிவிடுவார்கள் அம்மா! ஆனால் அதே சமயத்தில், மானமிகு மறக்குடியில் பிறந்த இந்த அகிலா மாண்பிழந்தும் வாழமாட்டாள். போகிறேன் நான் அமீர்கானின் கோட்டைக்கு, பார்க்கிறேன் அந்தக் கொள்ளைக் காரனை! அவனை அழித்தொழிப்பேன் அல்லது செத்துமடிவேன்."

மரண அமைதி அங்கே குடிகொண்டது. துக்கத்தால் எல்லோரும் வாயடைத்து நின்றனர். அகிலா சிவிகையைத் தயார் செய்யும்படி கூறிவிட்டுத் தன் அறைக்குச் சென்றுவிட்டாள்.

மறுநாள் காலை சிவிகை தயாராகிவிட்டது. மணப்பெண்போல தன்னை அலங்கரித்துக்கொண்ட அகிலா, பட்டுத்துணியிலே சுற்றப்பட்ட பொருள் ஒன்றையும் எடுத்து வைத்துக்கொண்டு புறப்படத் தயாரானாள். ராணியும், மற்றவர்களும் கண்கலங்க நின்றுகொண்டிருந்தனர். எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு, அகிலா சிவிகையில் ஏறி அமர்ந்தாள். சிவிகையைத் தூக்குவோர் புறப்பட்டனர். சிவிகை கோட்டை வந்து சேருவதற்குள் இருள் பரவிவிட்டது. அகிலாவின்வாழ்வும் அப்படித்தானே ஆகிவிட்டது!

கோட்டையின் மணி "டண், டண்" என்ற ஓசையுடன் ஒலித்தது. கோட்டைக்கதவு 'கிரீச்' என்ற சத்தத்துடன் திறக்கப்பட்டது. சிவிகை தூக்குவோர் கோட்டைக்குள்ளே சிவிகையைத்தூக்கிச் சென்றனர். ஆயுதமேந்திய வீரர்கள் முன்னும் பின்னும் பாதுகாப்பாகச் சென்றனர்.

அமீர்கானின் மாளிகைக்கு முன்னால் சிவிகை இறக்கி வைக்கப்பட்டதும், முகத்திரை அணிந்த மொகலாய மாதர் பலர், சிவிகையை நோக்கி, கையில் பன்னீரும் சந்தனமும், மலர்மாலையும் வாசனைத் திரவியங்களும் ஏந்தி வந்தனர். சிவிகையில் கட்டப்பட்டிருந்த பட்டுத்திரையை விலக்கி, அகிலாவுக்கு வரவேற்புக் கூறினர். உள்ளேயிருந்த இளவரசி அகிலா, மெதுவாகத் தரையில் கால்வைத்து நிமிர்ந்து நின்றாள். வானத்து வெண்ணிலவு வையகத்துக்கு வந்துவிட்டதோ, என்று திகைப்படைந்து நின்றனர் கூடியிருந்த பெண்டிர். திகைப்பு நீங்கியதும் பன்னீர் தெளித்து, சந்தனம் பூசி, மலர் சூட்டினர். மற்றும் சிலர் அத்தர், புனுகு, ஜவ்வாது ஆகிய வாசனைத் திரவியங்களை அகிலாவின் உடலிலே பூசினர். பின்னர் அப்பெண்கள் முன்னே செல்ல அகிலா மலர் தூவிய ரத்தினக் கம்பளத்தின்மேல் நடந்துசென்று அமீர்கானின் தர்பார் மண்டபத்தை அடைந்தாள். அங்கே தர்பார் மண்டபத்தின் நுழைவு வாயில் ஒவ்வொன்றிலும், ஈட்டி ஏந்திய கிரேக்க நாட்டு அலிகள் காவல் காத்து நிற்றனர். அவர்களின் கொடூரமான முகத்தைக் காணவும் அகிலா பயந்தாள். பளிங்குத் தூண்களும், தங்க ரேக்குகளிட்ட சாளரங்களும், கண்ணைக்கவரும் வண்ண நிறங்களில் கட்டப்பட்டிருந்த பட்டுத்திரைகளும், தரையிலே விரிக்கப்பட்டிருந்த பாரசீக நாட்டு ரத்தினக்கம்பளங்களும்,

★ சிந்தாமணி, பி. ஏ. ★

— 11ம் பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் : அஞ்சேன்!"

எண்ணம்

கண்ணதாசன்

மலர் 4 ‖ 12—10—57 ‖ இதழ் 15

முதுகுளத்தூர்க் கலகம்

பாண்டியர் வாழ்ந்த மண்ணில்
படைத்தளங் காத்த வீரர்
ஆண்டவர் இனத்தார்; எங்கள்
அருந்தமிழ்க் குலத்தார்; போரில்
மாண்டதால் பெருமை பெற்றோர்
மாபெரும் வரலாற் றேட்டைத்
தீண்டுவார் கரங்கள் தோறும்
தித்திக்கும் மறவோ ரோர்பால்

ஆதிநாள் தமிழர்; நாட்டின்
அடிப்படை அமைத்தோர்; வேதச்
சாதியாம் சனியன் கூத்தால்
தம்மரும் பெருமை தேய்ந்தோர்
தீதிலா மனத்தார்; இந்தத்
தென்னகத் துரிமை யாளர்
வாதிலே மற்றோர் பக்கம்
மாண்டனர் குளத்தூர் நாட்டில்!

தலைவர்கள் பேசும் பேச்சின்
தரக்குறை வாலே இந்தக்
கொலையெலாம் நிகழ்ந்த தென்றால்
குறைப்பட நியாயம் இல்லை!
நிலையிலாப் பதவிப் பேய்கள்
நிகழ்த்திய கூத்தால் எங்கள்
விலையிலா மாணிக் கங்கள்
வீழ்ந்தன கலகத் தூடே!

சாதியைப் புலமாய்க் கொண்டு
தலைவர்கள் அமைந்தால், ஆங்கு
நீதியே அமைவ தில்லை!
நிகழ்ந்தது குளத்தூர் நாட்டில்!
சாதியே! பேயே! சாவின்
தளத்திலே கிடந்த உன்னைத்
தேர்தலால் மீண்டும் கொண்டு
திணித்தவர் அழத்தான் வேண்டும்!

சூழ்ச்சியும் கொலையும் சாதித்
தொல்லையால் விளைந்த தென்றால்,
காட்சியைக் காணப் போன
'கன'த்திலும் சாதிப் போட்டி!
சாட்சியங் கூற வந்த
தலைவர்பால் சாதிப் போட்டி!
ஆட்சியா ஈது? மக்கள்
அரசியல் நெறியா ஈது?

மூத்ததோர் குடியின் மக்காள்!
மூண்டதோர் கலகத் தாலே
தீத்தழும் பெடுத்த எங்கள்
தீந்தமிழ்ச் செல்வங் காள்! நீர்,
நாத்தடிப் பேறிப் போன
தலைவர்கள் நாவைப் பார்த்துக்
காத்தது போதும்! நீரே
கண்ணியம் கடமை காப்பீர்! ★

— 10ம் பக்கத் தொடர்ச்சி —

இன்று நினைவுக்குக் கொண்டு வரவேண்டும்.

பொருளாதார நிலையினை ஆராய முற்பட்டால், நம்மிடம் காணும் குறைபாட்டினை நாம் இன்னும் போக்கிக்கொள்ள முற்படவேண்டும். வருவாய்க்குத் தக்க செலவு செய்தல், மிகுதியும் செலவிட்டு வருந்துகின்ற நிலை இவற்றையெல்லாம் நமது பொதுமறையிலிருந்து ஆங்கிலேயர் அறிந்து கடைப்பிடித்து வருகின்றனர். செங்காப் போதார், "நமக்கு வருவாய் குறைவாக இருந்தாலும் கவலை இல்லை. ஆனல் செலவு அந்த வருவாய்க்கு மேல் போகலாகாது" என்ற கருத்தை, மிகஅழகாக ஆங்கிலேயர் காலத்துக்கு முன்னரே கூறிப் போந்தார்.

"ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை."

என்ற நிலையில் நாம் பொருளாதாரத்தில் செம்மையுடன் வாழ நமக்கு வழிகாட்டியவர்கள் பலராவர்.

அரசியலில் மக்கள் நலங் கேட்டு அவர்களுக்காக வாழ்பவனே அரசன்— அரசாட்சி ஆகும். அந்நிலை உணர்ந்த அரசே சிறப்புடனிருக்கும் என்ற நிலைமையை உணர்ந்து நடக்க வழிகாட்டியவர் வள்ளுவரானலும், அதனை நாம் கண்கூடாகக் கண்டு உணரச் செய்தவர்கள், ஜனநாயகத்திற்குத் தங்களுடைய பிற்கால ஆட்சியின் போதாவது மதிப்புக் கொடுத்து நடந்து காட்டியவர்கள் ஆங்கிலேயர்களே.

மொழி

மிகப்பெரிய ஒரு நாடும் தனது மொழியில், இலக்கியத்தில், கலையில், பண்பாட்டில் கவனம் கொள்ளாமல் இருக்குமேயானல் அந்நாடு மிக விரைவில் தாழ்ந்து தன் நிலையில் கெடும் என்பதை ஆங்கிலப் பெருமக்கள் வாக்கிலிருந்தும், நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், "இமயமலைபோல் உயர்ந்த ஒரு நாடும் தன் மொழியில் தாழ்ந்தால் வீழும்" என்று கூறிய மொழியிலிருந்தும் அறிகிறோம். ஆங்கிலேயர்கள் தங்கள் மொழியில் நீங்காப்பற்றும் பிறமொழிகளை விரும்பிப் படிக்கும் பண்பும் பெற்றிருப்பதை நாம் காண்கிறோம்.

அம்முறையிலேயே நம் தமிழ் நாட்டின் கண் மதத்தைப் பரப்ப வந்த பாதிரிமார்கள், தமிழ் மொழியை விரும்பிப் படித்து அதிலுள்ள சுவையை உணர்ந்து அதனிடத்து நீங்காத பற்றுக்கொண்டு வாழ்ந்தார்கள்; அதோடு அம்மொழியின் சிறப்பையும் அதில் காணும் இலக்கியத்தின் உண்மைப் பொருளையும் இலக்கணத் திறனையும் உலகறியச் செய்தார்கள். அத்தகைய ஆங்கிலப் பெருமக்களுள் குறிப்பாகவும் சிறப்பாகவும் கொள்ளத் தக்கவர்களையும் அவர்கள் செய்த தமிழ்த் தொண்டினையும் அறிந்து கொள்ளுதல் நலம்.

வீரமா முனிவர் தேம்பாவணி என்ற சிறந்த இலக்கியத்தைத் தந்தவர். கால்டுவெல் என்ற பெரியார் மொழி பற்றிய இலக்கணத்தைத் தெளிவுபடக் கூறிப் பிறமொழியாளரும் தமிழின் சிறப்பை உணரச் செய்தவராவார்.

டாக்டர் போப் ஐயர் அவர்கள் திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துப் பிற்காலத்தில் பாரதியார் கூறிய வாக்குப்படி வள்ளுவனை உலகுக்குக் காட்டினர் என்பது மிகையாகாது. அண்மைக் காலத்து வாழ்ந்த ஹீராஸ் பாதிரியார், திராவிட நாகரிகத்தின் சிறப்பை உணர்ந்து தம் உள்ளத் தெளிவால் கூறிய வாக்கியமே அவர் தமிழ் மக்களிடமும், நாட்டிடமும் காட்டும் பெரும் பற்றைக் காட்டும். தம்மை ஸ்பெயின் நாட்டினின்றும் வந்த திராவிடன் எனக் கூறிப் பெருமை கொண்ட நிலையே அவரது அன்புடைமையை விளக்கும்.

இதுகாறும் கூறியவற்றால் ஆங்கிலேயர்கள் தங்கள் காலத்தில் அச்சுப் பொறி கொணர்ந்தும், கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டும் மொழி வளர்ச்சியில் கருத்துக் கொண்டும் ஆங்கில நூல் சிலவற்றைத் தமிழில் ஆக்கியும், தமிழ்நூல் சிலவற்றை உலக மொழிகளில் பெயர்த்தும், கலை நாகரிகம் பண்பாடு இலக்கண இலக்கியம் ஆகியவற்றின் உயர்வை உலக மக்கள் உணரச் செய்த செய்கைதான், அவர்கள் தமிழ் நாட்டுக்கும் மொழிக்கும் செய்த பெரும் செயலாகும். ★

வெண்பாப் போட்டி-6.

ஊடல் வெண்பா

அகத்துறையில், ஊடல் முறைப்படி விருப்பம்போல் எழுதலாம். ஊடல், ஒரு நாடகம்போல் அமைதல் வேண்டும். விரும்பினல், வெண்பாவின் கடைசி இரு வரிகளாக, ஒரு திருக்குறளையே முழுக்க எடுத்தாளலாம். (திருக்குறள் சோமேசர் வெண்பாவைப்போல)

முடிவு தேதி 19-10-57.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

இதுதான் திராவிடநாடு

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் எம்.ஏ., எல்.டி

- 3 -

நாளுக்கொருவன், வேளைக்கொருவன்-சங்கிலி வரிசையாக முன் வாசலில் மூவர், பின்வாசலில் நால்வர்-இப்படி குடும்பம் நடத்திய 'வாழ்வரசி' ஒருத்தி மற்றொருத்தியை-தன் கணவன் வெளியூர் செல்லவிட்டு அடைத்துக்கிடக்கும் ஒரு பெண்ணைப் பார்த்து, 'அடி வாழாவெட்டி' என்று அழைத்தாளாம்! இந்தக் கதையை நினைவூட்டுகிறது, திராவிட இன எழுச்சியாளரைப் பார்த்துப் பாரத தேச பக்தர்கள் கேட்கும் கேள்விகள்-'எது திராவிட நாடு? திராவிட நாட்டு எல்லைகள் என்ன? திராவிட நாடு பெற முடியுமா?' என்பவை. ஏனெனில் திராவிடநாடு பண்டைப் பெருநாடு, உலகின் முதல் தேசியஇனம், என்றும் தனி வாழ்வும் பெருவாழ்வும் வாழ்ந்த பேரினத்தாயகம். ஆனால் இந்திய மாநிலமோ இன்று ஆசியாக்கண்டத்தின் ஒரு பெரும்பகுதியாகிய துணைக்கண்டம், ஒரு குட்டி உலகம். பழங்காலத்திலோ, பழய புராண கால நில நூலின்படி, உலகின் ஒன்பது கண்டங்களில் அது ஒரு முழுக்கண்டம். இன்னும் பழங்காலப் புராணங்களின்படி, அதுவே ஒன்பது கண்டங்களையும் உள்ளடக்கிய முழு உலகமாய், ஏழு உலகங்கள் அல்லது தீவங்களில் ஒன்ருயிருந்தது. பாரதகண்டத்தை உள்ளடக்கிய பாரத வர்ஷமாகிய அதையே மனிதஇனம் வாழும் முழு நிலவுலகமாக, உப்புக்கடல் சூழ்ந்த நிலவலயத்தீவமாக மிகப் பழம் புராணங்கள் கற்பனை செய்துள்ளன. மற்ற நிலவலயத்தீவங்கள் அல்லது உலகங்கள் ஆறும் பால்கடலாலும், தயிர்க்கடல், நெய்க்கடல்களாலும் சூழப்பட்டவை--இயக்கர், கந்தருவர், கின்னரர், தேவர் வாழ்பவையாம்!

திராவிடநாட்டுக்கு இயற்கை எல்லைகள் உண்டு. மூன்று புறம் கடல். ஒருபுறம், வடக்கே, விந்திய மலையும் நடுமேட்டு நிலமும் அவற்றின் கடக்கமுடியாக் காடுகளும் நிலவுகின்றன. இன்றைய இருப்புப் பாதைகள்கூட இவ்வெல்லையை இரு கோடிகளிலும்தான் ஓரளவு ஊடுருவிச் செல்கின்றன. நேர் மாருக இந்திய மாநிலத்துக்கு இம்மாதிரி எல்லைகள் திராவிடநாட்டுக்கமைந்த எல்லையன்றி வேறு கிடையாது. ஏனெனில் திராவிடத்தையும் அப்பரப்பில் சேர்த்துக்கொண்டால்தான் திராவிடத்தின் முப்புற எல்லையாகிய கடல் அதற்கும் எல்லையாக முடியும். இல்லாவிட்டால் திராவிடத்தின் வடஎல்லையே அதன் தென்எல்லை. வடதிசையில் இமயத்தை அதன் எல்லையாகப் பெருமிதத்துடன் பலர் குறிப்பதுண்டு. ஆனல் அது நேபாளம், பூட்டாணம் ஆகிய நாடுகளுக்கும் எல்லை. இமயத்தின் தெற்கிலுள்ள இந்த நாடுகளும், வடக்கிலுள்ள திபெத்தும் ஓரின நாகரிகத் தொடர்புடையவை. கிழக்கிலோ பர்மா எங்கு முடிகிறது, இந்தியா எங்கு தொடங்குகிறது என்று கூறமுடியாது. வெள்ளையர் இட்ட கோடுதான் அங்கே எல்லை. கிழக்குப் பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் உள்ள எல்லையோ வெள்ளையரும், வெள்ளையர் காலக் காங்கிரஸ்-இந்துத் தலைவர்களும் குருதிப் போரிட்டுப் பேரம்செய்து வெட்டிச் செதுக்கிய கோடேயாகும். மேற்குத் திசையிலும் பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னே எதுவரை பாரசிகம், எது முதல் இந்தியா என்ற எல்லை வரையறை கிடையாது. வெள்ளையனின் ஏகாதிபத்தியக் கரம் சென்றெட்டிய எல்லை வரையறையே தவிர, வேறு எல்லை இல்லை. அப்பிரிவினைக்குப் பின்னே இந்து-முஸ்லிம் கலவரங்கள் அமைத்த எல்லையே எல்லை. இந்த எல்லைகள் அரசியல் எல்லைகள் மட்டுமே; நிலவரமான தேசிய எல்லைகள் என்று எவரும் கூறமுடியாது. ஏனெனில் வருங்காலப் போர்கள் ஒவ்வொன்ருலும் இது மாறுபடத் தக்கது.

இன்றைய பாரதத்தின் எல்லை இன அடிப்படையாக, மொழியடிப்படையாக அமைந்ததன்று. வங்காள மொழி பேசுகிறவர்கள் இந்தியாவிலும், கிழக்குப் பாகிஸ்தானத்திலும் சிதறிக்கிடக்கிருர்கள். பஞ்சாபி மொழி பேசுபவர்கள், சீக்கியர்கள், சிந்திமொழி பேசுபவர்கள் அதுபோலவே மேற்கெல்லையில் இரு தேசிய இனங்களிடையே சிதறிக் கிடக்கிருர்கள். பாரதக் கூட்டுறவினுள்ளே வாழும் மக்கள் மொழிவழி, இனவழி, நாகரிகவழி-எவ்வழி பார்த்தாலும் சிறிய பெரிய மொழிகள், மொழியினங்கள், இனக் கூட்டுறவுகளின் கதம்ப கூளங்கள், அவியல் குர்பல்கள் ஆகவே உள்ளனர். அதில் தனி நாடு கோரும் திராவிடநாடு போலவே, தனி வாழ்வுகோரும் நாகர் முதலிய பல்வேறு இனத்தினர் விலங்குக் காட்சிசாலையில் அடைபட்டுக் கிடப்பதுபோலக் கிடந்துழல்கின்றனர். இப்பெரும் பரப்பை ஒரு கண்டமென்று சிலரும், கண்டமல்ல, ஒரு சிறு உலகம் என்று சிலரும் கூறுவது இதனுலேயே.

திராவிட நாட்டு எல்லை மட்டுமல்ல, தேசியமும் இயற்கைத் தேசியம். அது மொழியையும், இனத்தையும், நாகரிகத்தையும் வரலாற்றையும் அடிப்படையாகக் கொண்டது. அதில் பேசப்படும் மொழிகள் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய திராவிட மொழிகள். இவை கிட்டத்தட்ட ஒரே மொழி என்று கூறத்தக்க அளவு, அடிப்படை ஒற்றுமையும் பொது வரலாற்று, நாகரிக, இனத்தொடர்புமுடைய மொழிகள். திராவிட நாட்டின் நிலஇயல் எல்லையில், தேசிய எல்லையடுத்து நிலவும் மராத்தி, பீலி, குஜராத்தி, கோண்டு, கூயி, ஒரியா முதலிய மொழிகளில்கூட, கோண்டு 'பண்படாத்திராவிட மொழி' என்று வகுக்கப்படுவது. 'பீலி'கூட ஆரிய மொழியினம் சாராதது, தமிழக 'வில்லி'களின் தொடர்புடைய பண்டைப் பெருந் திராவிடஇனம் சார்ந்த இனக்கலவை மொழியே. தவிர, வரலாற்றுக் காலத்திலேயே மராத்தியும், குஜராத்தியும் திராவிட (நாட்டு) மொழிக்குழுவில் சேர்க்கப் பட்டிருந்தன. அந்த அளவு அவை ஆரிய திராவிடக் கலப்புக்கு ஆளானவை. இவ்வகையான திராவிடத்தின் வடதிசை நிலஎல்லை இயல்பான தேசீய எல்லையாகவும், இயல்பாக வடக்கிலுள்ள ஆரிய இன மொழிகளுடனும் பிற வடதிசை இனங்களுடனும் படிப்படியாகக் கலக்கும் எல்லையாகவுமே இருக்கிறது.

திராவிட நாட்டின் தேசிய எல்லை திராவிட நாட்டின் நில எல்லையைப் பார்க்கச் சற்றுக் குறைந்ததே. ஆனாலும் திராவிட இயக்கத்தலைவர்கள் நிலஎல்லை முழுவதும் கோரவில்லை. ஏனெனில் வடதிசைப் போலித் தேசியத்தைப் போலத் திராவிடத் தேசியம் ஏகாதிபத்திய நோக்கம் கொண்டதன்று. நில ஆதிக்க, இனஆதிக்க நோக்கம் கொண்டதன்று. துருக்கிய மறுமலர்ச்சித் தந்தையான கமால் பாஷா இஸ்லாமிய எல்லை, துருக்கி நாகரிக எல்லை முழுதும் சேராமல் அவற்றை வேண்டாம் என்று உதறி இனஎல்லையுடன் நின்றது போல, திராவிடத் தலைவர்களும் தம் இனஎல்லையுடன் தம் தேசியக் கோரிக்கையை நிறுத்துகின்றனர். உண்மைத் தேசீயவாதிகளாகிய அவர்களுக்குத் தெரியும் – இனங் கடந்து பரவுவது தேசீய இனத்துக்கு வலுவல்ல, வலிமை கேடு என்று!

வரலாற்று முறையில், அரசியல் முறையில் பார்த்தால், வடதிசை தேசீய எல்லையற்ற ஒரு பரப்பாகவே வெள்ளையர் ஆட்சிவரை இருந்தது. அது என்றும் தனி வாழ்வோ, அயலாரிடமிருந்து பிரித்தறியத்தக்க அரசியல் நாகரிக வாழ்வோ வெள்ளையர் ஆட்சிக்காலம் வரை பெற்றிருந்ததில்லை. மூவாயிர ஆண்டாக அது அடிமையாட்சிப் பரப்பாகவே இருந்து வந்ததென்பதை வரலாறு காட்டுகிறது. ஆனால் அதே சமயம் மூவாயிர ஆண்டாக, வெள்ளையர் வரும்வரை தனி இனமாக, தனி இன நாகரிகமாக, தனிப்பெருஞ் சுதந்திர நாடாகத் திராவிடம் நிலவி வந்தது.

வெள்ளையர் ஆட்சியிலே தனி வாழ்வு பெற்ற பல்கூட்டு ஏகாதிபத்தியமாகிய இந்தியப் பரப்புத்தான், அவ்வாட்சிவரை சுதந்திரமாயிருந்து அவ்வெள்ளையராட்சியிலே விடுதலையிழந்த திராவிடத்தை நோக்கி நீ ஒரு நாடா என்று கேட்கிறது. நித்திய கலியாணி, நிதம் நிதம் பலருக்கு மடி விரித்தவள் ஒருநாள் ஒருவனுக்கு மடி விரித்தவளைப் பார்த்துச் சிறிய கதையே இது, வேறல்ல.

வெள்ளையர் வடதிசை ஆட்சி பெற்று வடவர் துணையால் தென்னகத்தில் பரவவில்லை. நேர்மாருகத் தென்னக ஆட்சி கைப்பற்றி, தென்னவர் வீரம், தென்னவர் செல்வம் ஆகியவற்றின் துணை கொண்டே தங்கள் ஏகாதிபத்தியத்தை வடக்கே இந்தியா, பாகிஸ்தான் பரப்புக்களிலும், 'பட்டாணிஸ்தான்' பரப்புகளிலும்,

— 9ம் பக்கம் —

தென்றல்

9-11-57 இதழிலிருந்து

மா. கி. தசரதன், எம். ஏ.

தரும்

அத்திப் பழம்

அற்புதக் தொடர்கதை

ஆரம்பமாகிறது!

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

தெ. சண்முகசுந்தரம்,
நெல்லை.

**(அ) "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"
'பகவன்' என்ற சொல் 'பகவன்' என்ற வடமொழிச் சொல்லிலிருந்து வந்துள்ளதா? அல்லது தூய தமிழ்தானா?**

(ஆ) திருக்குறளில், அறம், பொருள், இன்பம் என்று இருப்பதை பொருள், அறம், இன்பம் என மாற்றச் சொல்வதாக அண்ணா கூறியிருக்கிறாரே, இது பற்றித் தங்கள் கருத்து என்ன?

(இ) கம்பனால் இராமாயணம் சிறப்புற்றதா? அல்லது தமிழ் சிறப்புற்றதா?

(அ) ஆரிய இனமொழிகளாகிய ஆங்கிலம், ஜெர்மன், இலத்தீனம், கிரேக்கம் ஆகிய எம்மொழிகளிலும் 'பகவன்' என்ற சொல்லுக்கு இணையான சொல்லோ, சொல் மூலமோ கிடையாது. ஆகவே சமஸ்கிருதச் சொல் எனப் பொதுப்படக் கூறலாமேயன்றி, சமஸ்கிருதத்துக்கேயுரிய ஆரிய இனச்சொல் என்று கூறுவதற்கில்லை. மற்றும் வேத, பிரமண, ஆரணியக, உபநிடத காலங்களில் இச்சொல் வழங்கவில்லை. பாரத இராமாயண இதிகாசங்களிலே கூட அருவழக்கு ஆகும். மிகப் பிற்பட்ட (கி. பி. 10-ம் நூற்றாண்டுக்குரியதென்று கொள்ளப்படும்) பாகவத புராணத்திலேயே, அதுவும் சிறப்பாகக் கிருஷ்ணனைக் குறித்து மட்டுமே வழங்கப்படுகிறது.

கிருஷ்ணனுக்கும், புத்தருக்கும், அவருக்கும் முற்பட்டவரான சமணரின் முதல் தீர்த்தங்கரரான இடபதேவருக்கும், நாத்திக மதத்தின் முதல்வரான பிரகஸ்பதிக்கும் மட்டுமே பகவான் என்ற சொல் வழங்கப்பட்டது.

இன்றைய சமஸ்கிருதத்தில், பகவான் என்பதன் பொருள் எட்டு வகைச் செல்வமும் படைத்தவன், திருநிறைவுடையவன் என்பதே. பகவத் கீதையில் சுலோகத்துக்குப் புறம்பாக கிருஷ்ணனைக் குறிக்க வழங்கும் இச்சிறப்பு அடைமொழிக்கு ஆனிபெசன்டம்மையார் ஆங்கில மொழிபெயர்ப்பு இப்பொருளே **(Blessed Lord)** *தருகிறது.*

திருவள்ளுவர் கடவுளை உணர்ந்த இனத்தலைவரையே பகவர் என்று குறித்தாராதல் சாலும். ஆதிபகவர் அதில் முதலாவதாகவும், முதன்மையாகவும் அமைந்தவரையே. இத்தகைய கருத்துப் பிற்காலத்தில் கடைசியாளருக்கே தரப்பட்டது என்பதைக் கிருஷ்ண பகவான் என்ற வழக்கன்றி, இராம பகவான் என்ற வழக்கினிமை கண்டறியலாம். முதலாமவர்க்கே முதன்மை மரபு பழஞ் சமண சமயத்துக்கும் அதன் முற்பட்ட காலத்துக்கும் உரியதே.

சமஸ்கிருத வழக்கும், சமஸ்கிருதமும் சமணருக்குப் பிற்பட்ட காலத்தவை. திருவள்ளுவருக்கும் திருக்குறளுக்கும் உரிய காலம் சமணசமயத்தின் தொடக்க காலம் அல்லது அதற்கும் முற்பட்டது என்பதை இதுகாட்டும்.

பகவன் தமிழ்ச்சொல்லே. பிற்காலத்தில் ஞானகுரு, நபி, தீர்க்கதரிசி, புத்தர், தீர்த்தங்கரர் எனப் பலவகையில் பல சமயத்தாரால் வழங்கப்பட்ட வள்ளுவ மூலக் கருத்து பதிந்த சொல் அது.

எப்பொருள் கொண்டாலும், கடவுட் கொள்கையில் தமிழினத்துக்கும் யூத, அராபிய இனத்துக்கும் மிகமிகப் பிற்பட்ட – உண்மையாக வழுவறுத்துக் கூறுவதானால், என்றும் அயலான – ஆரிய இனத்துக்கும் சமஸ்கிருதத்துக்கும் அதுஉரிய சொல்லல்ல என்று துணிந்து கூறலாம்.

(ஆ) அண்ணா அவர்கள் கருத்து பொருள், அறம், இன்பம் என்ற சொற்களின் இந்நாளைய பொருளுக்கிசைந்தது. அது அண்ணா கருத்து மட்டுமன்று; பண்டைச் சங்ககாலத் தமிழர் கருத்தே. நாலடியாரில் ஒரு பாடல் அதை வலியுறுத்தல் காணலாம்.

**'முடுகிய வையத்து முன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்
நடுவண தெய்தாதான் எய்தும் உலைப்பெய்து
அடுவதும் போலும் துயர்'**

மேலும் அண்ணாவே கூறியபடி, நிதி முறையில் பொருள், இன்பம், அறம் என்ற முறையும் பொருந்தும். ஆனால் தோற்றுவாய் முறைப்படி (காரணகாரிய முறைப்படி) அறத்தால் பொருளும் பொருளால் இன்பமும் என்ற முறையும் பொருந்தும்.

முனைவர் மு. வரதராசனார் இரண்டாம் அறிவுரை முறையை விரும்பிப் பின்பற்றியுள்ளார்.

அறம் பொருள் இன்பம் ஆகியவற்றில் எம்முறையையும் பின்பற்றலாம் என்பதே, வள்ளுவர் உட்கோளாயிருத்தல் வேண்டும். ஏனெனில் இன்பத்தின் முடிவாகிய இல்லறத்துடனே அறம் தொடங்கி, அவர்தம் நூலை ஒரு முப்பாற் சக்கரம் அல்லது அறஆழி (தர்ம சக்கரம்) ஆக்கித் தந்துள்ளார். 'அறஆழி' அந்தணன், முப்பால் ஆழி இயக்கும் கடவுளே.

தவிர, பாயிரத்தில் வான்சிறப்பு இன்பப்பாலையும், ஒழுக்கத்து நீத்தார் (அதாவது பண்புடையார்) பெருமை பொருட்பாலையும், அறன் வலியுறுத்தல் அறத்துப் பாலையும் குறிப்பதாகும். வள்ளுவர் பாயிரத்தில் குறித்த முறை, முனைவர் வரதராசனார் முறையேயாகும்.

வள்ளுவர் அறம், பொருள், இன்பத்துக்குத் தந்த பொருளறியின், அவர் முறைக்கு ஒரு தனித்தன்மை உண்டு.

அறம் சமுதாயத்துக்கு, இனத்துக்கு, குடும்பத்துக்குத் தனிமனிதன் ஆற்றவேண்டும் கடமை. பொருள் சமுதாயம், இனம், குடும்பம் தனிமனிதனுக்கு ஆற்றவேண்டிய கடமை. இன்பம் தனிமனிதனைச் சமுதாயத்துடன் இணைக்கும் குடும்பப் பண்பு.

அறம் இயற்கைவழி மனிதனைச் செலுத்திச் சமுதாயம் அமைப்பது.

பொருள் இயற்கை வழி இனத்தைச் செலுத்திக் குடும்பம் வளர்ப்பது.

இன்பம் இனப்பண்பாகிய அருள் அதாவது படிப்படியாகத் தனிநலம் துறந்து விரியும் அன்பு அடிப்படையாக அறம் வளர்ப்பது.

இச் சக்கரத்தில் எதையேனும் முதலாகக் கொள்க. ஆனால் மூன்றும் ஒன்றே. வாழ்வின் ஒரே அடிப்படை இன அன்பும், ஒரே குறிக்கோளான இனவளர்ச்சியும் ஆகும். தோற்றமும் முடிவுமான இவ் 'இன இன்பமே' கடவுள், பேரின்ப உருவினனான 'பண்புமுதல்'!

'இறை வழிபாடு' என்ற முதல் அதிகாரம் காட்டும் மெய்மை, வள்ளுவ வாழ்வின் ஒருமை இதுவே. இது உலகின் வேறெந்நூலும், எவ்வறிஞரும், கலைஞரும், அறவோரும், எந்தச் சமய நூலாரும் காணாத, ஆனால் எல்லாரும் தம்மையுணராது ஏற்கத்தக்க மெய்மையே யாகும்.

(இ) இராமாயணமே, தமிழல்ல. கம்ப இராமாயணத்தை விடச் சிந்தாமணி சிறந்த காப்பியம். இரண்டையும்விடச் சிலப்பதிகார மணிமேகலைகள் சிறந்தன. சமஸ்கிருதத்திலேயே பலராலும் மொழிபெயர்க்கப்படும் பெருமை, இன்றைய உலக ஆராய்ச்சியாளர்களால் உலகஇலக்கிய மூல முதல் நூல் என்று பாராட்டப்படும் சிறப்புப் பெருங் கதைக்கு உண்டு. இதே சிறப்பு வருங்கால ஆராய்ச்சியால் சிலம்பு மேகலைகளுக்கும் பெருகும்.

கம்பனால் இந்தியாவின் தமிழ் நீங்கலான ஏனைய தாய்மொழிகள் சிறப்புற்றன என்று வேண்டுமானால் கூறலாம். ஏனென்றால், இந்தியாவிலுள்ள எல்லாத் தாய்மொழி இராமாயணங்களும் கம்பராமாயணத்துக்குப் பிற்பட்டவையே. பல இராமாயணங்கள் மூல நூலாகக் கம்ப ராமாயணத்தைக் குறிப்பிடவில்லையாயினும், உண்மையில் பெரும்பாலானவை அதைத் தழுவி எழுந்தவையே என்பதை, அனைத்திந்திய இராமாயண ஒப்புமை தெள்ளத் தெளியக் காட்டவல்லது.

சமஸ்கிருதத்தில்கூட, அத்யாத்ம ராமாயணம் கம்பராமாயணத்தை மூலமாகக் கொண்டு, தழுவி எழுதப்பட்ட வழிநூலே என்று கருத இடமுண்டு.

★

துரை. தங்கவேலு,
ஆறுகாமம், இலங்கை.

சமண முனிவர்களால் எழுதப்பட்ட 'நாலடியார்' இன்று ஒளி வீசுகின்றதே, அன்று (அவர்கள் காலத்தில்) அதற்கு இந்த வரவேற்பு இருந்ததா?

'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்ற பழமொழியில் இரண்டு திருக்குறளையும், நாலு நாலடியாரையும் குறிக்கிறது. நாலடியார் திருக்குறளுக்கும் முற்பட்ட இடம் பெற்றுள்ளது. தவிர, 'வேளாண் மரபுக்கு வேதம்' என்று அதைச் சிறப்பிக்கும் பழைய வெண்பா ஒன்றும், நாலடியார் பதிப்புக்களில் காணப்படுகிறது. நம் பாட்டனார் காலம்வரை, அதாவது 19ம் நூற்றாண்டு வரை திண்ணைப்பள்ளிக்கூட முறையில் புலவர் என்று வெளியிற் செல்லும் மாணவர் இறுதியாகப் படிக்கும் ஏடுகள் நாலடியாரும், திருக்குறளுமேயாகும்.

நாலடியாருக்குச் சங்க காலத்திலும் திருக்குறளுக்கு மிகவும் பிற்படாத மதிப்பு இருந்ததென்றே கூறலாம். உண்மையில் திருக்குறள் பதினெண்கீழ்க் கணக்கில் சேர்க்கப்படுவதற்கே 'நாலடியார்', 'முதுமொழிக்காஞ்சி' 'இன்னாநாற்பது', 'இனியது நாற்பது' போன்ற சங்ககால ஏடுகளே காரணமாய் இருந்திருக்கவேண்டும்.

நாலடியார் சங்க காலத்துக்குப் பிற்பட்டது, நெடுங்கணக்கு ஏடுகள் பெரும்பாலானவையுமே பிற்பட்டது என்று கருதியவர் உண்டு. ஆனால் இதற்கு ஆதாரமாகக் காட்டப்பட்ட கூற்றுக்கள் வலிமையுடையன அல்ல. 'சித்தாந்த சமாஜம்' போன்ற சமயப் பற்று மட்டும் விஞ்சிய நிலையங்கள் இச்சமண ஏடுகளைப் பிற்காலத்தனவாகக் காட்டப் பெரும்பாடுபட்டன. ஆனால் சமயம் காரணமாகக் காலம் வரையறுப்பதானால், சைவத்துக்கு முற்படச் சமணமும், அதற்கும் முற்படப் புத்தநெறியுமே தென்னகமெங்கும் மிகுதி தழைத்திருந்தது என்பது கவனிக்கப்படுதல் வேண்டும். சைவத்துக்கும் வைணவத்துக்கும் அரசியல், தேசியப் பெருமை ஏற்பட்டது, தலைகாயன்மார் (மூவர்) காலங்களிலும், நம்மாழ்வார் காலத்திலும்தான். அதற்குமுன் பாண்டியரும், பல்லவரும், கங்கரும், ஆந்திரரும் சமண புத்த நெறிகளையே வளர்த்தனர்.

மணவழகர் மன்றம்
பெத்துநாயக்கன்பேட்டை,
சென்னை-1.

காந்தியாரும் வள்ளுவரும்

அன்புடையிர்!

மேற்படி மன்றச் சார்பில் நாளது சனிக்கிழமை 12-10-57 மாலை 6-30 மணிக்கு மன்ற நிலையம் முருகேச முதலி தெரு, 2ம் எண்ணுள்ள கட்டடத்தில் **காந்தியார் படத்திறப்பு விழா** *நடைபெறும்.*

தலைவர்: **தோழியர் அலமேலு அப்பாதுரை** *அவர்கள்.*

காந்தியார் படத்திறப்பு: **அருட்திரு. அருணகிரிநாதஅடிகள்** *அவர்கள்.*

சொற்பொழிவு: **உயர்திரு. புலவர் மா. நன்னன் அவர்கள் "வள்ளுவரும் இல்லறமும்"**

இன்னிசை: **திரு. கே. எம். கோவிந்தராசன்** *அவர்கள்.*

இங்ஙனம்:
டாக்டர் எஸ். தருமாம்பாள்,
காப்பாளர்.

பெண்களுக்கு தனி இடம்

★ பெருமாளே, பழிகாரா, கேள் ! ★

திருநெல்லை பண்டைய பாண்டி நாட்டின் தென்எல்லை. பொருநையாற்று நீரோட்டம், பாபநாச நீர் வீழ்ச்சி, குற்றாலத்து எழிற்காட்சி, தூத்துக்குடி முத்துமலை இவையெல்லாம் அந்த மாவட்டத்தின் அழகுக்கு அழகு செய்யும் அணிகளாகத் திகழ்கின்றன. அந்தப்பகுதியிலே பிறந்து வளர்ந்த கவிவாணர்களும், கர்மவீரர்களும் பலர். குறிப்பாக நெல்லை மாவட்டத்து ஒட்டப்பிடாரம் பகுதி, பல அறிவுச் சுரங்கங்களையும், வீரக்குன்றுகளையும் நாட்டிற்குத் தந்திருக்கிறது. துரத்தி வந்த நாயை எதிர்த்தடித்த முயலைக் கூறி, வீரம் செறிந்த மண் என்பதற்கு விளக்கம் தருவார்கள். பாஞ்சாலங் குறிச்சியில் பாசறையமைத்து, பரங்கியரை எதிர்த்த வீர பாண்டியனும், கவிபாடி மக்களுக்கு உணர்ச்சி ஊட்டிய பாரதியாரும், கப்பலோட்டி செக்கிழுத்து சிப்பி ஏந்தி மாண்ட கர்மவீரர் சிதம்பரனாரும் இவர்கள் போன்ற பலரும் ஓடி விளையாடிய பகுதி ஒட்டப்பிடாரம்.

தமிழ்க்கடல் குளித்து முத்தெடுக்கும் திறனுடையோர், இலக்கிய நயம் செறிந்த கவிதைகளிலே இதயத்தைப் பறிகொடுத்து மகிழ்வதும், சொல்நயமும் ஓசைநயமும் குறையாத பாக்களிலே சொக்கித் திளைப்பதும், மொழியின் பெருமையையும் அதை வளர்த்த முன்னோர்களின் அருமையையும் எண்ணி எண்ணிப் பூரிப்பதும், பொருளுக்கு இல்க்கணமும்,பண்புக்கு இலக்கியமும் அமைத்துப் புகழ்பெற்ற சிறப்பை எண்ணி மகிழ்ச்சியடைவதும் கண்கூடு. இடைக்காலத்திலே தோன்றி, ஒரு சில கவிதைகளைப் பாடி தமிழ் இலக்கியச் சோலையிலே இலைமறை காயாக ஒளிருகின்ற கவிவாணர்கள் பலர். அவர்களுடைய கவிதைகளில் பொருளாழமும் அதைப் போட்டி போட்டு வெல்லும் நகைச்சுவையும், சொல்லோட்டமும் அதைத் தழுவி நிற்கும் ஓசைநயமும் ஏராளம் உண்டு. அத்தகைய கவிவாணர்களுள் ஒருவர் பல்லாற்றுலும் புகழ்பெற்ற ஒட்டப்பிடாரத்தை உறைவிடமாகக் கொண்டவர். அவருடைய கவிதையொன்றில் புத்துலகக் கருத்துக்களின நிழலாட்டம் தெரிகிறது. சூழ்நிலையும் சுற்றுச் சார்பும் அழுத்திய பொழுது, அவர் உள்ளத்திலிருந்து வெடித்துச் சிதறிய சினத்தீ கவிதை உருக்கொண்டது. அதன் விளைவால்தான் இன்று நாம் அதைப் படிப்பதற்கும், அவர் இதயத்தை உணர்வதற்கும் முடிகிறது.

ஒட்டப்பிடாரத்தில் வைகுந்தநாதன் என்பாரின் திருமகன் வசை கவியாண்டான்கவிராயர் வசை பாடுவதில் வல்லவர் என்ற இசை பெற்றவர். அவருடைய உருட்டி முறைக்கும்விழிகளுக்குப் பயப்படாவிட்டாலும், மக்கள் அவர் இதயத்தில் உருவாகும் கவி மொழிக்குப் பயப்படுவர். கயத்தாறு, துரோகிகளின் துணைகொண்டு வீரபாண்டியக் கட்டப்பொம்மனைத் துரைத்தனத்தார் தூக்கிலேற்றிய ஊர். ஒட்டப்பிடாரத்தை அடுத்திருக்கும் அந்தச் சிற்றூரில், பெருமாள் கோவில் ஒன்று விழாவாலும், பக்தர்களின் வரவாலும் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தது. அந்தப்பெருமாள் கோவிலில் திருநாள் கொண்டாட, பக்தர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டிருந்தனர். பாற்கடலில் பள்ளி கொண்ட பெருமாளை பக்தர்கள் வீதி உலா அழைத்துவர ஏற்பாடு செய்துகொண்டிருந்தனர். நாதசுர ஒலியும், பெருமாள் திருநாம பஜனையும், பக்தர்களின் ஆரவாரமும், பார்க்க வந்தோரின் கூக்குரலும் அந்தக் கோயிலின் சுற்றுப்புறங்களை கோலாகலமாக்கிக் கொண்டிருந்தன. மாலை மறைந்து மதியம் வானிலே வலம்வரத் துவங்கியிருந்த அவ்வேளையில், வசைகவியாண்டான் கவிராயர் அவ்வூர் வந்து சேர்ந்தார். ஒளிவிளக்குகளும் தோரணங்களும் அவர் உள்ளத்தைக் கவர்ந்தன. ஆனால் அவற்றையெல்லாம் பார்த்து மகிழ முடியாத அளவிற்கு, அவர் வயிற்றைப்பசி கிள்ளிக்கொண்டிருந்தது. தமிழ்ப் புலவர்க்கே உரிமையான பசி அவர் உடலை வாட்டியதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லையே!

பசியால் வாடிய கவிராயர், ஒட்டுத் திண்ணையொன்றில் உட்கார்ந்து கொண்டு விழா நிகழ்ச்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தார். பெருமாளை வீதி உலா எடுத்துச்செல்ல முற்பட்ட அடியார்கள்திருக்கூட்டம் தூக்குவதற்கு ஒரு ஆள்குறைவதை உணர்ந்தது. பக்கத்தில் உட்கார்ந்திருந்த கவிராயரின் திருமேனி மீது அவர்கள் விழிகள் படிந்தன. பசியால் துடித்துக்கொண்டிருந்த கவிராயரும் பெருமாளைத் தூக்கவும் அதன் வருவாயைக் கொண்டு பசித் தொல்லையைக் களையவும் திட்டமிட்டுக்கொண்டிருந்தார். இருதரப்பாரிடையேயும் உருவான ஒப்பந்தம் திருவடி தாங்கிகளுள் ஒருவராகக்கவிராயரையும்கொண்டுவந்து நிறுத்தியது. பெருமாளையும் அதற்குப் பூசை செய்யும் பார்ப்பானையும் தாங்கிக்கொண்டு,வாகனம் ஊரைச் சுற்றி வலம் வந்தது. எழுதுகோல் பிடிக்கும் கவிராயரின் மெல்லிய தோள்களை வாகனத்தின் பளு அழுத்திக்கொண்டிருந்தது. திருக்கஞ்சாத்துகளும், மண்டபப்படிகளும் வாகனம் வலம்வரும் நேரத்தை மிகைப்படுத்திக்கொண்டிருந்தன. பெருமாளை வெகுநேரம் சுமந்துகொண்டு வந்த கவிராயரின் தோள்கள், கனத்தால் வலியெடுத்தன. இரவு பதினறு நாழிகைக்கு மேலாயிற்று. அவரது உடலும்உள்ளமும் ஒருசேரச் சோர்ந்தன. பசியோ வயிற்றைப் பதம்பார்த்துக் கொண்டிருந்தது! பக்தர்களை வருத்துகின்ற பழிகாரன் பெருமாள் மேலும், பெருமாளோடு ஒட்டிக்கொண்டு வாகனத்தின்மேல் உட்கார்ந்திருக்கும் பார்ப்பான் மேலும் ஆத்திரம் வந்தது. எல்லையில்லாக் கோபத்திற்கு ஆளான கவிராயரின் இதயம் குமுறியது. பொங்கியெழுந்த சினம் வசைகவியுருவிலே வெளிவந்தது. அந்தக் கவிதை, தமிழ் இலக்கியப் பேழையுள் தன்னையும் ஒருமணியாகச் சேர்த்துக்கொண்டது. அவர் இதயத்தில் உருவான ஆத்திரத்தை அப்படியே படம் பிடித்துக்காட்டும் அக்கவிதை, நல்லதொரு நகைச் சுவை விருந்தாகவும் அமைந்திருக்கிறது.

**"பாளைமணங் கமழுகின்ற
கயத்றாற்றுப்
பெருமாளே ! பழிகாரா ! கேள்,
வேளையென் ருலிராவேளை
பதினறு
நாழிகைக்கு மேலாயிற்றே
தோளை முறித்ததுமன்றி நம்பியா
னையுங்கூடச் சுமக்கச் செய்தாய்
நாளையினி யார்சுமப்பார்
எந்நாளு
முன்கோயில் நாசந் தானே!"**

என்றுவசைபாடியவாறே வாகனத்தைக் கீழே போட்டுவிட்டார். கவிராயர். வாகனம் உடைந்துசிதறியது. அதன்மேல் உட்கார்ந்திருந்த பூசுரர்க்கும் நல்ல அடி! பெருமாளின் சிலையும் துண்டு துண்டாக உடைந்தது. பக்தர்களெல்லாம் முறைத்துப் பார்த்தனர். தமிழ்பாடித் தமிழ்பாடி நெஞ்சில் உரமேறிய கவிராயரை அவர்கள் வேறு என்ன செய்ய முடியும்?

அன்று கோலாகலமாக வாழையும் தோரணமும் வரவேற்புக்கூற, ஒளிவிளக்குகள் அழகை வாரியிறைக்கக் காட்சி தந்த கோயில் இன்று குப்பைமேடாக மாறிவிட்டது. அன்றிருந்து பக்தர்களின் பார்வை அப்பக்கம் திரும்பவேயில்லை. கலனுகிப்போன அக்கோயிலை எண்ணிப் பார்ப்போரும் இன்று இல்லை.

ஆமாம்; வசைகவியாண்டான் கவிராயரின் வாக்குப் பலித்துதான் விட்டது!

—நாஞ்சில், அன்பெழில்

வானெலியில் இந்தித் திணிப்பு

அகில இந்திய வானெலியின் டைரக்டர் ஜெனரலான ஜே சி. மத்தூர் என்பாரை தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தோழர் வி. பி. இராமன் அவர்களுடன் கடந்த 5-10-57 அன்று சென்னை வானெலி நிலையம் சென்று சந்தித்தார். அந்த அதிகாரியிடம் தி. மு. கழகம் சார்பில் அறிக்கை ஒன்று தரப்பட்டது.

'விவித் பாரதி' என்ற நிகழ்ச்சியானது இந்தித் திணிப்பிற்கு மற்றெரு எடுத்துக்காட்டு என்றே தென்னுட்டாரால் கருதப்படுகிறது என்பதை அந்த அதிகாரிக்குப் பொதுச் செயலாளர் எடுத்துரைத்தார். அவர் கொடுத்த அறிக்கையில், "1957 அக்டோபர் 3ம் தேதியன்று, 'விவித் பாரதி' நிகழ்ச்சி மொத்தம் 7 மணி 15 நிமிடங்களுக்கு இருந்தது; அதில் 9-15 முதல் 9-30 வரை (பாரத்வாணி) 15 நிமிடங்கள் மட்டுமே-மேலும் 8-15 முதல் 8-35 வரையிருந்த (மஞ்ஜுஷா) 20 நிமிட நேரத்தில் ஒரு பகுதியும் மட்டுமே- பிரதேச மொழிகளில் ஒலிபரப்பிற்கு ஒதுக்கப்பட்டது. இதர நாள் நிகழ்ச்சிகளிலும் அதிக மாற்றம் ஒன்றும் இல்லை. மொத்தம் ஐந்து மணிநேர நிகழ்ச்சிகளில் சுமார் பதினைந்து நிமிடங்கள் மட்டுமே, ஏதோ பிச்சை போடுவதுபோல பிரதேச மொழிகளில் ஒலிபரப்பிற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சியுள்ள நேரம் முழுவதிலும் இந்தி நிகழ்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுவிடுகின்றது. தென்னுட்டு மக்களுக்கு இந்த நிகழ்ச்சிகளின் தலையும் தெரிவதில்லை காலும் தெரிவதில்லை. இது தங்களுக்குப் புரியாத மொழியில் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி, மக்கள்மீது வலுக்கட்டாயமாக அவற்றைத் திணிப்பதற்கு ஒப்பாகும்" என்று குறிப்பிட்டிருக்கிருர்.

விந்தையடா விந்தை!

★ முடியரசன் ★

மாநிலந் தன்னில் நடத்திவரும்-விந்தை
மானிடர் செய்கையைச் சாற்றுகின்றேன்
ஏனிவர் இவ்வணம் ஆற்றுகின்றார்–என
எண்ணித் துணிந்துசொல் ஓர்முடிவு

செத்த பிணத்தைப் புதைத்துவைத்த-குழி
சென்றங்கு மீண்டுங் கிளறுகின்றார்
பித்தரைப் போலப் பிதற்றுகின்றார்-இனிப்
பேசாப் பிணத்தின்முன் பேசுகின்றார்

தோண்டி எடுத்த உடலமதில்-படி
தூசி துடைத்துடன் பூமுடித்து
வேண்டிய பூசை செலுத்துகின்றார்-இந்த
விந்தையை யாதென்று உரைத்திடுவேன்

சூட்டு புகழுரை எத்தனைதான்- அட!
சொல்லுக் கடங்காமல் மிக்கதடா!
ஏட்டில் எழுதிய போற்றிகளும்–ஒரு
எண்ணிக்கை காட்டத்தொலையுமதோ

ஆயிரம் ஆயிரம் கொட்டுகின்றார்-அணி
ஆடை பலசெய்து பூட்டுகின்றார்
கோயிலைப் போற்பல மாளிகைகள்-கட்டிக்
கொள்ளையாய் மானியம் கூட்டுகின்றார்

விந்தையடா இது விந்தையடா-என
வேறொரு திக்கில் விரைந்துசென்றேன்
சிந்தனை அற்றவர் அங்கிருந்து-புரி
செய்கையைக் கண்டுளம் நொந்ததடா

கண்ணொளி மங்கிய காட்சியினன்-பிறை
கண்டது போலொரு கூனுடையான்
எண்ணிய எண்ணம் விளம்புதற்கே-ஒரு
ஏதுவிலான் திக்கு வாயுடையான்

நின்று நடந்திடக் கால்களிலான்-அவன்
நிற்பது வோஒரு கோலின்துணை
ஒன்றிய கோலினைப் பற்றுதற்கோ-கையில்
உற்ற விரல்களும் முற்றுமிலான்

இத்தனை பண்புகள் கொண்டவனை-நலம்
ஏற்றிட ஊசிகள் போடுகின்றார்
சித்த மருத்துவம் செய்யினுமே-அவன்
சீரிய வாழ்வினைக் காண்பதுண்டோ

ஆணிப் பொன்னுடையும் போர்த்துகின்றார்-நல்ல
ஆட்சிப் பொறுப்பையும் நல்குகின்றார்
காணிக்கை எத்தனை கொட்டுகின்றார்-இந்தக்
காட்சியைக் காணக்கண் கூசிநின்றேன்

உள்ளம் உருக்கிடும் ஓர்குரல்தான்-செவி
உற்றதும் சட்டென நான்திரும்பக்
கள்ளமில் லாஒரு ஏழைமகன்-பசி
காட்டும் முகத்துடன் நின்றிருந்தான்

கட்டுதற் கோர்துணி அற்றவனும்-கையில்
காசு பணங்களும் அற்றவனும்
திட்டி விரட்டினர் அன்னவனை-அவன்
தேம்பிக் கிடப்பதைக் கண்டுநின்றேன்

தங்க உடல்நலம் கொண்டவன்தான்-அவன்
தங்க இடமின்றிச் சுற்றுகின்றான்
எங்கும் புறக்கணிப் பானதடா-சிங்க
ஏறு வளங்குன்றிப் போனதடா!

ஆவி உடல்வளம் இத்தனையும்-பெறும்
ஆண்மகன் இப்படித் தேய்ந்திடவே
பாவி மடம்படு மானிடர்கள்-நஞ்சு
பாய்ச்சுதல் கண்டுளம் வெந்ததடா!

செத்த மொழிக்கிங்கு சீர்வரிசை-ஒரு
செம்மை பெருமொழிக் கேற்றமிங்கே
பெற்ற மொழிக்கொரு காவலில்லை-என்ற
பெற்றியை நெஞ்சம் நினைத்ததடா!



14-9-57ம் தேதி மாலை 6 மணிக்கு சென்னை மணவழகர் மன்றத்தில், நகராட்சிமன்றத் தலைவர் கே. என். சீனிவாசன் தலைமையில் ஆசிரியர் கண்ணதாசன் கலைவாணர் படத்தைத் திறந்து வைத்தார்.

★ ★ ★

இராமன் திருவிளையாடல்!

[இராமாயண போருக்குப் பிறகு இராமனும் சீதையும் அசோகவனத்தில் கூடி மகிழ்கின்றனர். இராமன் குடிகாரன் மட்டுமல்ல, சீதைக்கு முன்னாலேயே பல பெண்களுக்கும் இன்பம் கொடுக்கும் பொதுநலவாதி! வால்மீகியார் வருணிக்கும் இராமனின் திருவிளையாடலை நினைத்தால், இராமனும் ஒரு கடவுளா என்ற ஐயமே எல்லோருடைய மனத்திலும் எழும். இது வால்மீகி இராமாயணம் உத்தரகாண்டம் 42வது சருக்கத்தில் 18 முதல் 22வது பாடல் முடியவுள்ள சுலோகங்களின் மொழிபெயர்ப்பு.]

தேன்பொழியும் பூக்காடாம் அசோகவனந் தன்னில்
சீர்மிகுந்த மலரணையில் மன்மதனாய் இராமன்
தேனாக இனிக்கின்ற மதுவுண்ட பின்னர்
திசைபத்தும் பார்த்தபடி மதிமயங்கி நின்றான்
தேனாகப் பாலாகத் தித்திக்கும் சீதை
செங்கரும்பின் சாறாக அங்குவந்து நின்றாள்
வானோக்கி தரைநோக்கி வடிவழகி தன்னை
வைத்தவிழி வாங்காமல் பார்த்தபடி நின்றான்.

இமையோரின் பெருந்தலைவன் இந்திரனும் ஒருநாள்
இதயமலர் "சசிலை"க்கு மதுகொடுத்த தைப்போல்
அமுதாகத் தித்திக்கும் கனிச்சாறு என்றே
அழகாகப் பொய்சொல்லி மதுக்கோப்பை தன்னை
இமையாமல் நின்றிருந்த சீதையவள் வாயில்
எழிலாகச் சேர்த்திட்டான் தடந்தோளன் இராமன்
தமைமறந்து மதுவுண்டு இருவருமே அந்தத்
தண்காவில் அணைத்தபடி இன்பத்தே ஆழ்ந்தார்.

மாமிசத்தை நனிவுண்டான், மதுவுண்டான்; இராமன்
மங்கையரின் மடிமீது புரண்டபடி நெஞ்சில்
காமத்தீ தனைஅணைத்தான் களிநடமே கொண்டான்
கார்கண்ட மயிலாகத் தோகையினை விரித்துப்
பூமாதர் வலம்வந்து நடமாடி நின்றார்
பொன்னுடலை அணைத்தபடி தசரதனின் மைந்தன்
"சோமரசம்" கனிச்சாறு மதுவகைகள் தம்மை
தோகையரின் திருவாயில் மகிழ்வோடு பெய்தான்.

துடியிடையை வளைத்தபடி வஞ்சியர்கள் ஆட
திருக்குமரன் மதுவோடு அவர்பின்னே ஓட
முடைநாற்றம் எங்கெங்கும் புயலாக வீச
மோகத்தில் ஆழ்ந்திருந்தாள் சனகனவன் குமரி
பெடையோடு கொஞ்சுகின்ற பறவையினம் போல
புலவுண்ட சீராளன் வஞ்சியருக் கெல்லாம்
தடையின்றி நல்லின்பம் கொடுத்திட்டான்; அவரும்
தலைவனவன் திருப்பணியில் பெருமகிழ்ச்சி கொண்டார்!

மூலம் :
வால்மீகி இராமாயணம்

★

மொழிபெயர்ப்பு :
[illegible]

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

வான சாட்சிகளின் வாக்குமூலங்கள், ஒரு சில வழக்குகளில், அந்த வாதியையே தாக்கிவிடுதல் உண்டு. (இந்த அனுபவமும் வக்கீல் சுப்ரமணியத்திற்கு எங்கே இருக்கப் போகிறது) கழகத்தினரை நாஸ்திகர் என்று குற்றம் சாட்டுகிறார். ஆதாரமில்லாத சாட்சிகளைக் கொண்டு ஆர்ப்பரிக்கும் அப்பாவி வக்கீல் தானே அவர்! தமிழகத்தின் பண்பாட்டுப்படி தமிழர்கள் அனைவருமே ஆஸ்திகர்கள்தான்! அத்தனைபேரும் ஒன்றே குலமும் ஒருவனே தேவன் — என்ற கொள்கை கொண்டவர்கள் தான்! இது ஆஸ்திகமானால் தமிழர்கள் ஆஸ்திகர்கள்; அல்லது இதுதான் நாஸ்திகமானால் தமிழர்கள் அனைவருமே நாஸ்திகர்கள்தான்! நாஸ்திகர்கள் என்று தனிப்பிரிவு தமிழ்நாட்டில் இதுகாறும் இருந்ததில்லை. கடவுள் ஒருவரே என்பது நாஸ்திகமானால் ஆஸ்திகர்கள் யார்? கடவுளைக் கண்டவர்களுமில்லை, கண்டதாகச் சொன்னவர்களுமில்லையே! சுப்ரமணியம் கண்டதாகச் சொல்லட்டும்! அவர் ஒருவரையே நாம் ஆஸ்திகரென்போம்! கடவுள் இப்படிப்பட்டவர் என்று சொல்லட்டுமே! **கண்டவர் விண்டிலர்! விண்டவர் கண்டிலர்!**—இதுதானே ஆண்டாண்டு காலமாக ஆஸ்தீகம் பேசுவோரை மண்டையிலடிக்கும் சம்மட்டியாக இருந்து வருகிறது!

இரண்டாவது, 'தமிழ் கெடுவது நாஸ்திகரால்தான்' என்கிறார். நாஸ்திகர்கள் என்ற பிரிவே இல்லையென்று மேலே கண்டோம். கனம் அமைச்சரோ, நாஸ்திகர் என ஒரு பிரிவு இருப்பதாகவே முடிவு கட்டி, அவர்களாலேயே தமிழ் கெடுகிறது என்கிறார்.

இந்தி வருகிறது! அதனால் தமிழ்மொழிக்கு உள்ள முக்கியத்துவம் குறைய இருக்கிறது! இப்போது தமிழைக் காக்க முனைந்திருப்பது யார்? எந்த ஆஸ்திகர்! காங்கிரஸ் கட்சியிலே சுரணை கெட்டு இருப்போர் நீங்கலாக அத்தனை பேரும் இந்தியை எதிர்க்கிறார்கள். அவர்கள் அனைவரும் தி. மு. க.வினர் அல்லர்! தமிழைக் காப்பது நாஸ்திகமானால் ஆச்சாரியார் நாஸ்திகர்! ரா. பி. சேதுப்பிள்ளை நாஸ்திகர்! வக்கில் சுப்ரமணியத்தின் கருத்து இந்த முடிவுக்குத்தான் யாரையும் இழுத்துக்கொண்டு வரும். இந்தியை எதிர்க்கும் பெரும் பணியில் தி. மு. கழகத்தைத் தவிர, வேறு தனிப்பட்டவர்கள் சேரக்கூடாதென்பதற்காக அமைச்சர் இவ்வாறு மிரட்டியிருக்கலாம். அந்த மிரட்டலுக்கு ஒரு காலத்தில் மதிப்பிருந்தது; வாழ்வை நம்பி, உத்தியோகத்தை நம்பி பெரும்பேர் வாய்மூடி மௌனியாக இருந்தார்கள். இனி அந்த நிலைக்கு வழியில்லை. தமிழ் கெட்ட பிறகு வாழ்வு எதற்கு என்ற முடிவுக்கு தமிழர்கள் வந்துவிட்டார்கள். அலை கடலுக்கு எதிரே நின்று நண்டு வாயைப் பிளந்தால் அலை ஓய்ந்து விடுமா?

அமைச்சரின் பேச்சை வைத்து இன்னொரு கருத்தை ஆராய்வோம்.

தமிழைக் கெடுப்பவர்கள் நாஸ்திகர்கள்—இது அமைச்சர் வாதத்தின் கருப்பொருள். அதன்படி பார்த்தால் தமிழை வளர்ப்பவர்கள்—பாதுகாப்பவர்கள்தான் ஆஸ்திகர்கள் என்று பொருளாகிறது.

இன்றைய அரசியல் சூழ்நிலை **தமிழுக்கு ஆபத்து!** அமைச்சர் இந்த இடத்தில் ஆஸ்திகராக விருப்பமா? நாஸ்திகராக விருப்பமா? தமிழைக் காப்பது ஆஸ்திகமென்றால் அமைச்சர் இந்தியை எதிர்ப்பாரா? அவ்வாறு எதிர்த்தால் தமிழ்ப்பெரும் புலவர்களுக்கு இரட்டை லாபமாயிற்று! தமிழும் பாதுகாக்கப்படும்; நாஸ்திகர்கள் என்ற பட்டமும் கிடைக்காதல்லவா! அமைச்சர்கள் எதிர்க்காததால்தானே மக்கள் எதிர்க்கவேண்டியதிருக்கிறது; சிவநேசச் செல்வர்களும் தி. மு. க. அங்கத்தினர்களாக மதிக்கப்படுகிறார்கள். எங்கே மந்திரிகளுக்குத் துணிவுண்டா? தமிழ் நெஞ்சுண்டா? போகட்டும். தி. மு. கழகத்திற்கு வேண்டுமானால் நாஸ்திகப் பட்டம் வந்து தொலையட்டும்! ஆஸ்திக மந்திரியே எதிர்ப்பீரா இந்தியை!

அதனால்தான் டாக்டர் ராசமாணிக்கனார், இரண்டாண்டுகளுக்குமுன்பே தெரிவித்தார், சர்க்கார் புலவர்களுக்கும் கருப்புச் சட்டை மாட்டிவிடுகிறது என்று. மேலே குறிப்பிட்டதைப் போல—ஜனநாயக அமைப்பில் சிரசிருக்க வாலாட இடமில்லாதிருந்தால் இவ்வளவு காலம் சுப்ரமணியம் மந்திரியாகவா இருப்பார்? கோயம்புத்தூரில், வீட்டுக்கு வெளியே வக்கீல் என்ற ஒரு விளம்பரப் பலகையைத் தொங்கவிட்டுக்கொண்டு தூங்கி விழுந்து கொண்டல்லவா இருப்பார்! பாவம்! மானம் போயும் உயிர் வாழ நினைப்பவர்களுக்கு எதைச் சொல்லி என்ன பயன்? ★

உருவகம்

மூன்று மேகங்கள்

★

ஒரு மலைமுகட்டில் மூன்று மேகங்கள் சந்தித்தன. கருத்துத் திரண்டு, பிரசவத்துக்கு நிற்கும் பெண்போலக் காட்சியளித்த அவை, மழையாக மாறிவிடுவதற்கு இன்னும் சிறிது நேரமே இருந்தது.

ஒரு மேகம் சொல்லிற்று:

'நான் அதோ வரண்டு கிடக்கும் பூமியில் குதிப்பேன்! அங்கே 'தண்ணீர், தண்ணீர்!' என்று தவித்துக்கிடக்கும் மக்களின் குறையை, அதன்மூலம் போக்குவேன். அலிபாபாவின் குகைபோல இருண்டு, தன்னுடைய காய்ந்துபோன குடலைக் காட்டிக்கொண்டிருக்கும் கிணற்றின் அடிவயிற்றில், உயிர் உண்டாக்குவேன். அதன்மூலம் மக்களின் பழக்கத்திற்கும், குடிப்பதற்கும் தேவையான தண்ணீர் ஆவேன். வீடுகளின் அருகிலுள்ள பள்ளங்களில் குதித்து, சின்னஞ்சிறு குட்டையாக உருவெடுப்பேன். அப்பொழுது என்னைக் கடலாக எண்ணிக்கொண்டு, கள்ளங்கபடில்லாத குழந்தைகள் காகிதக் கப்பல்களை என்மீது விடுவார்கள். அந்தக் கப்பல்களை நான் அடித்துச் செல்வதைப் பார்த்து, அவர்கள் மகிழ்ச்சியால் துள்ளிக் குதிப்பார்கள். தங்களுடைய அழகிய கால்களையும், கைகளையும் என்னில் இணைத்து, தண்ணீரை அள்ளி அள்ளி அந்தக் கப்பல்களின்மீது வீசுவார்கள். அந்தக் காட்சியில் நான் என்னையே மறந்து மகிழ்வேன்!'

இரண்டாவது மேகம் சொல்லிற்று:

'நான் இதோ களையிழந்து கிடக்கும் ஆற்றில் குதிப்பேன்! அந்த ஆற்றுப் போக்கில் சென்று, தங்கள் வயல்களில் வளங்காணத் தவித்துக்கொண்டிருக்கும் உழவர்களின் மகிழ்ச்சிக்காக, அந்த வயல்களை அடுத்த குளங்களை அடைவேன். குளங்களிலிருந்து, வாய்க்கால்கள்மூலம் வயல்களில் புகுந்து, நெற்பயிர்களின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிவேன். விளைந்து, அறுவடையை நோக்கி நெற்பயிர்கள் நிற்கும்போது, உழவனிடம் காணப்படும் மகிழ்ச்சி...... அப்பப்பா! உலகத்தில் அதுபோன்ற மகிழ்ச்சியை வேறு எங்கும், எவரிடத்தும் காணமுடியாது!'

கர்வம்பிடித்த அந்த மூன்றாவது மேகம் எதுவுமே பேசவில்லை.

அதே நேரத்தில் மலைமுகட்டில் ஒரு பெருங்காற்று எழுந்தது. அந்த மூன்றாவது தனி மேகம், காற்றைப் பயன்படுத்திக்கொண்டு, அதன் உதவியால் கிழக்கு நோக்கி விரைவாக ஓடியது. ஏனென்றால் அது மழையாக மாற வேண்டிய நேரம் நெருங்கிவிட்டிருந்தது!

கிழக்கே வெகுதூரம் ஓடி வந்துவிட்டதால், அதன் கால்கள் தளர்ந்துவிட்டன. தனது ஓட்டத்தை நிறுத்திக்கொண்டு, அந்த மேகம் கீழே நோக்கியது. அங்கே பெருங்கடல்! கடலின் அழகிய அலைக்கரங்கள், தன்னை விரும்பி வரவேற்பதுபோல மேகத்துக்குத் தோன்றியிருக்கவேண்டும்!

மேகம் விரைவாகக் கீழே குதித்தது. குதிக்கும்போது உற்சாகமாக அது கூவியது:

'இதோ தெரிகிறது எனது இலட்சிய பூமி! நான் இந்தக் கடலில் மழையாகப் பெய்வேன். பிறகு, கதிரவனின் பொற்கரங்களால் அணைக்கப்படும்போது, அதனுடன் சேர்ந்து ஆவியாக மாறி, திரும்பவும் மேகமாக உருப்பெறுவேன். அந்த முட்டாள் மேகங்களைப்போல என்னை நான் அழித்துக்கொள்ளமாட்டேன். எனக்கு எப்பொழுதும் வாழ்வு வேண்டும்! எப்பொழுதும் உயிர் வேண்டும்!'

சிற்றூர், வயல்வெளி, கடல் எங்கும் மழை பெய்தது!

மக்கள் மகிழ்ந்தார்கள். வாடிய நெற்பயிர்கள் தலை நிமிர்ந்தன. குழந்தைகள் சிரித்தார்கள்; உற்சாகமாக விளையாடினார்கள்.

கடலில் பெய்த மழைபற்றி யாரும் கவலைப்படவேயில்லை!

—ப. புகழேந்தி

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

பர்மாவிலும், சிங்கப்பூரிலும், இலங்கையிலும், ஏடனிலும் விரிவுபடுத்தினர்கள். அதுபோலவே, வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்த உயிர்த்தேசீயம் ஏடனிலோ, பர்மாவிலோ, சிங்கப்பூரிலோ, இலங்கையிலோ தொடங்கவில்லை. அவற்றில் தேசீயம் பரவுவதற்கு முன்னே அவற்றைத் தூண்டிவிடத்தான் அவ் ஏகாதிபத்தியம் விரைந்தது. அப்படியும் பிரிந்த பர்மாவும், இலங்கையும் இந்தியா சுதந்திரமடைந்த அன்றே தாமும் சுதந்திரம் அடைந்தன. மலாயாவிலும் தேசீய உணர்ச்சி இந்தியாவிலிருந்து பரவி, அதுவும் இந்தியாவை அடுத்து சுதந்திரம் பெற்றுள்ளது. ஆனல் இந்தியாவினுள்ளே இத்தேசீய ஆர்வம், விடுதலைக்கனல் வடக்கே இந்தியப் பரப்பிலோ, பாகிஸ்தான் பரப்பிலோ, பட்டாணிஸ்தான் பரப்பிலோ தொடங்கவில்லை. தென்னகத்திலேயே வேர்விட்டு வடதிசையில் கொடியாக மட்டுமே பரந்தது. அது பரவாமல் தடுப்பதற்கு வெள்ளை ஏகாதிபத்தியம் பிரிவினை மந்திரத்தை அன்று கண்டு பிடிக்கவில்லை. கனலை விட்டுத் தொலைவில் தங்கள் ஏகாதிபத்தியத் தளத்தை மாற்றியமைக்கவே, வெள்ளையர்கள் அன்று முயன்றனர். தென்னகத்தில் 1752-ல் ஆர்க்காட்டைக் கைப்பற்றிய பின்தான், அவர்கள் வடதிசையில் 1764-ல் வங்காளத்தில் வேரூன்றத் தொடங்கினர். அது வரை வெள்ளையர் மூலபலம், மூலதளம் தெற்கே சென்னையில்தான் இருந்தது. சென்னையே கிட்டத்தட்ட பிரிட்டிஷ் கம்பெனியாட்சியில் இந்தியாவின் தலைமையிடமாகவும் இருந்தது. சென்னை வீரர், சென்னைப்பணம். சென்னையில் அனுபவம் பெற்ற கவர்னர்கள், தளபதிகள், கிளைவ் (Clive) ஸர் அயர்கூட் (Sir Eyrs Coote) போன்றவர்கள் உதவியாலேயே வங்காளம் வெல்லப்பட்டது. ஆனல் தெற்கே 18-ம் நூற்றுண்டின் பிற்பகுதியிலேயே தேசீயக்கனலின் வெப்பம் வெள்ளையரைத் தாக்கியதனல், 1764 க்குப் பின், அவர்கள் வங்காளத்தில் கல்கத்தாவைத் தங்கள் தலைநகரம் ஆக்கினர்கள். 1857 வரை அதுவே இந்தியாவின் தலைநகரமாயிருந்தது. ஆனல் தெற்கிருந்து பரவிய தேசீயக்கனலின் வெப்பு அங்கும் நூருண்டுகளுக்குள் வெள்ளையரைத் தாக்கத் தொடங்கவே, 1857 க்குப்பின் அவர்கள் இந்தியாவின் முழு அடிமைப் பரப்பு, தேசீய ஒளிபரவாத இந்தி மொழிப் பரப்பின் கோடியிலுள்ள தில்லியைத் தங்கள் புதிய ஏகாதிபத்திய மூலதளமாக்கிக் கொண்டனர். இந்தியாவில் உள்நாட்டுத் தேசீயங்கள், உள்நாட்டுப் பேரரசுகளின் தளங்கள் தென்னடும், வங்கமுமே, அவற்றை விடுத்து அயல் தேசீயங்கள், அயலினப் பேரரசுகளின் மூலதனமாகிய தில்லிக்குப் போன பின்தான், வெள்ளை ஏகாதிபத்தியம் கீழ்திசையில் எளிதில் தழைக்க முடிந்தது. தில்லி இந்தியாவின் படரி, சிந்தி அதன் பிடரிமயிர் — இவற்றைப் பிடித்துக்கொண்டால் இந்திய மாநிலத்திலுள்ள இனங்களை எளிதாக அடிமைப்படுத்தி ஆளலாம் என்று தில்லி சென்ற வெள்ளை ஏகாதிபத்தியம் கண்டு கொண்டது. அந்த ஏகாதிபத்தியத்தின் 'பட்லர்'ப் பதிப்பான வடதிசைக் குட்டி ஏகாதிபத்தியமும் அதே முறையைக் கைப்பற்றிக் கீழ்த்திசைத் தேசிய இனங்களை அடக்கியாள முற்பட்டு வருகிறது.

இந்திப் பரப்பும தில்லியும் கீழ்திசை அடிமைக்கள மையங்கள் என்று, வெள்ளை ஏகாதிபத்தியம் கண்டுகொண்டதனுல்தான், தன் ஏகாதிபத்திய வாரிசுரிமையைத் தன் அடிமைப் பிள்ளையாகிய தில்லிக்குக் கொடுத்துச் சென்றது. தான் கண்டெடுத்த உள்நாட்டு விதேசி மொழியாகிய இந்தியையும் வளர்த்துவிட்டுச் சென்றுள்ளது. அது வீரமரபில் நின்ற பிள்ளையாகிய தென்னகத்தை நம்பி அதனிடம் உரிமை ஒப்படைக்க விரும்பவில்லை. தென்னகம் விடுதலை உரிமை பெற்ருல் கீழ்திசை எங்கும்—ஆசியா, ஆபிரிகா முழுவதும் முன்போல் மீண்டும் புதிய தேசியங்களாகத் தழைத்துப் புது நாகரிகம் வளர்க்க நேர்ந்துவிடும் என்பதை வெள்ளையர் அறிந்திருந்தனர். அதே காரணத்தினுல்தான் வெள்ளை ஏகாதிபத்தியம், தெற்கே காங்கிரஸ் சார்பில் போர் முழக்கமிட்ட கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரத்தின் வாரிசுகளையோ, காங்கிரசுக்கு வெளியேயிருந்து மிதவாதப் போர்வையில் சமூகப் புரட்சியும் அடிப்படைத் தேசியத் தன்மான ஆர்வமும் வளர்க்கத் துணிந்த நீதிக்கட்சியினரின் வாரிசுகளையோ முற்றிலும் தமக்கேற்ற அடிமைகளாக, கங்காணி மன்னர்களாக நம்பவில்லை. சுயஆட்சி என்று கத்திப் பின் சுயஆட்சியின் சாரம் போதும் என்று விளக்கியும், பூரண சுதந்தரம் என்று கர்ஜித்துப் பின் பிரிட்டிஷ் மன்னரையே பொதுவரசின் இணைப்புச் சின்னமாகக் கொண்ட குடியரசு வேண்டுமென்று பசப்பியும் இருதிசை மணியங்களாய்த் தேசீய வேடமிட்ட வடதிசை ஏகாதிபத்திய முதலாளித்துவத் தலைவர்களையே நம்பி, அவர்களிடம் கவலையின்றித் தம் உரிமையை ஒப்படைத்தனர். குலைக்கிற நாய் கடிக்காது என்ற வெள்ளையரின் அனுபவ அறிவு வீண் போகவில்லை. இன்று பல்லிழந்த பழய வெள்ளை ஏகாதிபத்தியமாகிய பிரிட்டனுடனும், புதிதாக அரிசிப்பல் குருத்துவிட்டு வரும் புதிய வெள்ளை ஏகாதிபத்தியமாகிய அமெரிக்காவுடனும் இந்திய உள்நாட்டு ஏகாதிபத்தியம் தன் உரிமை முதலாளிப் பிள்ளைகளாகிய டாட்டா பிர்லாக்கள் மூலமாகவும் டி. டி. கே, நேரு போன்றவர்கள் மூலமும் பேரம் செய்து தென்னகத் தேசியத்தையும் அது சூழ்ந்து நிலவும் முதிரா ஆசியத்தேசியங்களையும் பிரித்தாண்டும் சுரண்டியும் கீழ்திசையில் அடிமைப்பயிர் வளர்த்து வருகிறது.

இந்த ஏகாதிபத்தியத் தந்துப் பிள்ளையாகிய தில்லிதான் சுதந்தர தேசியத்தின் உதயசூரியனுகிய திராவிடத்தைப் பார்த்துக் கேலி செய்கிறது.

> **தொண்டு செய்யும்**
> **அடிமை-உனக்குச்**
> **சுதந்திர நினைவோடா!**
> **பண்டு கண்ட துண்டோ?**

என்று வெள்ளையர் திலகரிடம் கேட்டதாகக் கவிபாரதியார் பாடும் பாணியில், தென்னகத் தலைவரிடம் இந்தக் குட்டி ஏகாதியத்தியம் சீறிப் பேசத் துணிந்துள்ளது! அந்தக் குட்டி ஏகாதிபத்தியத்தின் அடிவருடும் தன்மானம், தன் மொழிப் பற்று, தன் இனப்பற்றற்ற சொத்தைகளும் தம் சொத்தைப் பற்களைக் காட்டிச் சொத்தை வாதங்கள் பேசி வருகின்றன. தம் நொள்ளைக் கண்களை மறந்து திராவிட இன வீறு பெற்ற இளங்காளையர்களையும் வீரத்தாய் இனத்தின் உரிமை நங்கையர்களையும் பார்த்து நொள்ளைக் கண்ணரென்று விதண்டா வாதம் பேசிவருகிறது.

(தொடரும்)



நூல் நயம்

அசோகன் காதலி

இந்தியத் துணைக்கண்டத்தில் தோன்றிய புத்தக் கொள்கைகள் இன்று உலகம் முழுதும் பரவியிருக்கின்றன. பிறந்த துணைக் கண்டத்தில் அந்தக் கொள்கைகளுக்கு மதிப்பில்லை. அதற்காக தந்தைக்கும் மகனுக்கும் தகராறு ஏற்பட்டிருக்கிறது. ராஜ்யத்திற்கு ராஜ்யம் போர் நடந்திருக்கிறது. உலகப் புகழ்பெற்ற அசோகனுக்கும், அவன் அண்ணன் சுசீமனுக்கும் பெரும் பகையைக் கிளப்பி விட்டதும் புத்தரின் நல்ல கொள்கைகள்தான். பெருங் கொந்தளிப்பை உண்டுபண்ணி மகதசாம்ராஜ்யத்தை சிவக்கவைத்த அற்புதமான சம்பவங்களை கோவைசெய்து சுவைமிகுந்த நாவலைப் படைத்திருக்கிருர் காதல் ராமனுதன் அவர்கள். அசோகன், சாணக்கியன், சுசீமன், காருவகீ ஆகிய நால்வரைக் கொண்டு சித்தரிக்கப்பட்ட இந்த நவீனம், மகதசாம்ராஜ்யத்தையே நம்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது.

"நான் எங்கே பிறந்தேன் தெரியுமா? ஆட்டு மந்தைகளைப் போல், ஒருவன் காட்டிய வழியில் ஓடும் இந்த வடநாட்டிலல்ல! புத்திக் கூர்மைகளுக்குப் பேர்போன தென்னுட்டு மண்ணில்! சுசீமா, நான் தென்னுட்டான்!"—என்று சாணக்கியன் சுசீமனிடம் பேசும் கட்டம் கம்பீரமாக, சரித்திரபூர்வமானதாக அமைந்திருக்கிறது. தமிழகம், அரு. ராமனுதன் அவர்களிடம் இதுபோன்ற நவீனங்களை எதிர்பார்க்கிறது.

அசோகன் காதலி—புத்தக அமைப்பு மிக அழகாக இருக்கிறது. கண்கவரும் முகப்பு. ஒவ்வொரு அத்தியாயத்தின் துவக்கத்திலும் படங்கள். வெள்ளைக் காகிதம். 150 பக்கங்கள். ரூ 1-50 தாராளமாகக் கொடுக்கலாம்.

சரபோஜிக்கோட்டை
நரியம்மா விடுதி நங்கை

புத்தக உலகில் இப்பொழுது தடுக்கிவிழுர் இடமெல்லாம் நிறைந்து கிடப்பவை துப்பறியும் நாவல்கள்தான். படித்ததையே படித்துச் சலிக்க வேண்டிய 'துர்ப்பாக்கியம்' துப்பறியும் நாவல் வாசகர்களுக்கே கிடைத்திருக்கும் ஒன்று! மேல்நாட்டுக் கதைகளைப் படித்துவிட்டு பெயரையும் ஊரையும் மாற்றி, சம்பவங்களை அப்படியே வைத்து 'மயிர்க்கூச்செரியும் மர்ம நாவல்' என விளம்பரம் செய்து வாசகர்களை ஏமாற்றுவது, இப்பொழுது மிகச் சாதாரணமாக நடைபெற்று வருகிறது. அதனுல் மொத்தத்தில் நல்ல துப்பறியும் நாவல்களைக்கூடப் பலர் வெறுக்க நேரிட்டு விடுகிறது.

இந்தக் குறைகளைப் போக்கும் முறையில் எப்போதும் ஒளி விடுபவை பிரேமா பிரசுர வெளியீடுகள்தான். குறிப்பிட்ட துறைகளில் குறிப்பிட்ட நிறுவனங்களுக்குத் தனி மதிப்பு இருப்பது போலவே, நல்ல காதல் நாவல்கள், துப்பறியும் நாவல்கள் வெளியிடுவதில் பிரேமா பிரசுரத்திற்கு ஒரு தனி இடம் கிடைத்திருக்கிறது. அந்தத் தனி இடத்தைக் காக்கும் முறையிலே சமீபத்தில் அவர்கள் வெளியிட்ட இரண்டு துப்பறியும் நாவல்களும் உள்ளன.

மேதாவி—புதிதாக அறிமுகப் படுத்தப்பட வேண்டியவரல்ல. துப்பறியும் கதைத் துறையில், தனக்கென ஒரு இடம் பிடித்துக் கொண்ட நல்ல எழுத்தாளர் அவர். அவருடைய எழுத்துக்களில் நாம் பல புதுமைகளைக் காணமுடிகிறது— சம்பவங்களில் மட்டுமல்லாமல் நடையிலும்கூட.

அவரால் எழுதப்பட்ட சரபோஜிக்கோட்டை, நரியம்மா விடுதி நங்கை—என்ற அந்த இரண்டு நாவல்களும் நல்ல முறையில் அமைந்திருக்கின்றன.

படிக்க ஆரம்பித்தால் முடித்த பின்னரே கீழே வைக்கத் தோன்றும் அளவு சிறப்பு, பொதுவாகவே துப்பறியும் நாவல்களுக்கு இருக்கவேண்டிய ஒன்ருகும். அதனை நிச்சயமாகப் பெற்றிருப்பவையாக அந்த இரண்டு நாவல்களும் உள்ளன.

சிறந்த கதைகள், அழகிய படங்கள், அருமையான அமைப்பு இவற்றைப் பெற்றிருக்கும் இரண்டு நாவல்களும், வாசகர்களுக்கு நல்ல விருந்தாக அமைந்திருக்கின்றன.

சரபோஜிக்கோட்டை	... ரூ.	1-50
நரியம்மா விடுதி நங்கை	... ரூ.	1-50
அசோகன் காதலி	... ரூ.	1-50

கிடைக்குமிடம் :—
பிரேமா பிரசுரம்,
சென்னை-24.

ஆங்கிலேயர்களும் தமிழும்

தமிழைப்பற்றி அறியாதார் இல்லை. அகிலமெங்கணும் தமிழின் பெருமை பரவி நிற்கிறது. இவைகளையெல்லாம் விட ஒரு பெரும் கீர்த்தியைத் தமிழ் சம்பாதித்திருக்கிறது. ஒரு நாட்டின்மீது அரசியல் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கும் வேறொரு நாட்டான், அடிமை நாட்டின் மொழியைத்தான் முதல் முதலில் கெடுக்க நினைப்பான். ஆனால் வெள்ளையன் - இருநூறு ஆண்டுகளாக இந்தியத் துணைக்கண்டத்தைத் தனது காலடியிலே போட்டுத் துவைத்துக்கொண்டிருந்தவன் தமிழைக் கற்ருன்; தமிழ்க் கருவூலங்களை ஆங்கிலத்தில் பெயர்த்து எழுதிக்கொண்டான். பிறரை மயக்குவதிலே பேர்போன வெள்ளையன் தமிழிடம் மயங்கிவிட்டான். இந்த உண்மையை மதுரை தியாகராசர் கல்லூரி வரலாற்றுப் பேராசிரியர் **டாக்டர் எம். எஸ். வைரண பிள்ளை, எம். ஏ., பி. எச். டி.** இங்கே விளக்கியிருக்கிருர்கள். **கடல்கடந்த அந்நியன்** தமிழை மதித்த விதத்தையும், **விந்தியம் கடந்த அந்நியன்** தமிழை அழிக்க நினைக்கும் கெடுமதியையும் தமிழ்ப் பெருமக்கள் புரிந்துகொள்ள, நிச்சயம் இந்தக் கட்டுரை பயன்படும் என நம்புகிருேம். உணர்த்த வேண்டிய நேரத்தில் உணர்த்துகிருேம். தூங்கிவிட்டால்... ஆபத்து !

(ஆ-ர்)

உலகின்கண் தோன்றிய மக்களுள் முதலில் தோன்றியவர்கள் என்றும், கல்தோன்றி மண் தோன்ருக் காலத்தே முதன்மையாக வாழ்ந்த குடியினர் என்றும் போற்றிப் பாராட்டப் பெற்றவர்கள் தமிழர்கள். அவர்கள் வாழ்ந்த நாடு பன்னெடு நாட்களாகத் தமிழ்நாடு என்றே அழைக்கப்பெற்றது. இந்நிலையில் வாழ்ந்த தமிழ்ப்பெருமக்கள் ஈடும் இணையுமின்றிச் சிங்களம், புட்பகம், சாவகம் முதலிய நிறைத்தீவுகளுடனும் உரோமர், கிரேக்கர் முதலிய ஐரோப்பிய நாட்டினருடனும் வணிகத் தொடர்பு கொண்டு விளங்கினர் என்பதைத் தமிழ் நூல்களினின்றும் சில மேலைநாட்டு வழிப்போக்கரின் குறிப்புக்களினின்றும் அறிகின்ருேம்.

வெளி நாட்டினர் பலரும் தமிழகத்தின்கண் வந்து மங்காப் புகழ்கொண்டு வாழ்ந்தார்கள்- வாழ்கின்ருர்கள். இந்நிலையில் தண்டமிழ் நாட்டின்கண் வந்த ஐரோப்பியர்கள், செந்தமிழ் மொழியைக் கற்று ஆய்வுத் திறனுடையராய்த் திகழ்ந்து மொழிக்குச் செய்த தொண்டினையும், அதனடியாக மக்கள் கல்வி வளர்ச்சிக்குச் செய்த பணியினையுமே இக்கட்டுரையில் சுருக்கமாகக் கூற விழைகின்றேன்.

வெளிநாட்டார் நமது நாட்டிற்குப் பதினைந்தாம் நூற்ருண்டின் இறுதியில் வந்து சில இடங்களில் தங்கித் தங்களது வாணிகத் தொழிலை மேற்கொண்டு வாழ முற்பட்டனர். அவர்களுள் பதினாறும் நூற்ருண்டில் நிரந்தரமான இடம் அமைத்து வாணிகத் தொடர்பு ஏற்படுத்தியவர்கள் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் எனக் குறிக்கலாம். வாணிகம் பேண வந்த ஆங்கிலேயர்கள் தங்களது மதத்தைப் பரப்பவும், அதில் மக்களைச் சேர்க்கவும் முயன்றனர்.

மதக்கருத்துக்களை மக்களுக்குப் போதிக்க வந்த குருமார்கள் தங்கள் கருத்தை நமது தமிழ் மக்களுக்குக் கூற அவர்கள் தமிழறிந்தாரில்லை. அவர்கள் மொழியில் கூறப்படும் கருத்துக்களை ஏற்கவோ நம் மக்களால் முடியாது. இந்நிலையில், அவர்களுடைய கொள்கை நிறைவேற்றத்திற்கு மொழி தடையாக இருந்ததால், வந்த பாதிரிமார்கள் தமிழ்மொழியினைக் கற்கத் தொடங்கினர். அது காரணமாகத் தமிழ்மொழியிற் சில மாறுதல்-வளர்ச்சி ஏற்படலாயிற்று. சிறப்பாக ஆங்கிலேயர் காலத்தில்தான், தமிழ்மொழியில் அதிகமான உரைநடை நூல்கள் ஏற்படலாயின. அதற்குமுன் அங்ஙனம் ஏற்படாமைக்குக் காரணம், மக்கள் தாங்கள் எண்ணிய கருத்தினை ஓலைச்சுவடியிலோ கல்லிலோ பொறித்திடக்கூடியவர்களாக இருந்ததேயாம்.

முதல் முதலாக ஆங்கிலேயர்கள் அலுவலகப் பணிக்கும், ஏனைய செயல்களுக்கும் துணை ஏற்படுத்திக் கொள்ளுவான் வேண்டிச் "சென்னைக் கல்விச் சங்கம்" என்ற ஒன்றை ஏற்படுத்தினர்கள். இச்சங்கம் பத்தொன்பதாம் நூற்ருண்டில் தோற்றுவிக்கப் பெற்றபோதிலும் இச்சங்கத்தால் தமிழ் மொழி வளர்ச்சி ஏற்படவில்லை. ஆனால் அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் தமிழ் கற்றுக்கொள்ளவே பயன்பட்டது. என்ருலும் பாதிரிமார்களே நம் தமிழைக் கற்று அதன் வளர்ச்சிக்கும் - மாறுபாட்டுக்கும் காரணமாக விளங்கினர்கள்.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் அரசியல் குழப்பம் நீங்கி அமைதியான ஆட்சியை உண்டாக்கிக் கொண்ட ஆங்கிலேயர்கள், நமது நாட்டு மக்களின் கல்வியில் கருத்தைச் செலுத்தி-"கண்ணுடைய ரென்போர் கற்ருேர்" எனப் பொய்யா மொழியார் புகன்றுள்ளபடி மக்களைக் கண்ணுடையவர்களாக்க எண்ணி நாட்டின் பல பகுதிகளிலும் பள்ளிக்கூடங்கள் நிறுவினர். சில அரசாங்கத்தாரால், பல பாதிரிமார்களால், மற்றும் சில தனிப்பட்டவர்களால் நிறுவப்பட்டன. இவற்றுள் பின்னுள்ள இரண்டும் அரசாங்க உதவி பெற்றே நாட்டில் கல்விப் பணி புரிந்து வந்தன.

இக்காலத்தில்தான் உரைநடை நூலின் இன்றியமையாமையை உணர்ந்து பல உரைநடை நூல்களை எழுதத் தொடங்கினர். அதோடு ஐரோப்பிய முறையில், இலக்கியம், நிலநூல், சரித்திரம் முதலியவற்றை உரை நடையில் ஆக்கமுற்பட்டனர். படிப்போருக்குப் பண்டை வழக்கப்படி "உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்" இன்றித் தனித்த உரை நடை நூல்கள் தோன்றலாயின. எழுதப்பெற்ற நூல்கள் எழுதிய ஒரு சிலருக்கேயன்றிப் பிறருக்கும் பயன்படும் வகையில், ஆங்கிலேயர்கள் தங்களது நாட்டினின்றும் அச்சுப் பொறியைக் கொண்டு அச்சிட்டு அனைவரும் அந்நூல்களின் பயனைப் பெறுமாறு துணைசெய்தார்கள். ஆங்கிலேயர்களால் ஏற்படுத்தப்பெற்ற "சென்னைக் கல்விச் சங்கம்" ஏற்படுத்திய பரிசுகளின் காரணமாக வரலாறு நூல்களும் வெளிவந்தன. அதோடு உரைநடை இலக்கண நூல்களும் தோன்றின. இந்த நூற்ருண்டின் இறுதியில்தான் செய்தித்தாள்கள் - நாள் வெளியீடுகள் வார வெளியீடுகள்- மாதவெளியீடுகள்—நாட்டில் நடமாடலாயின.

இவ்வாறு அச்சுப் புத்தகம் நாட்டில் நடமாடத் தொடங்கு முன்னர், மக்கள் ஓலையில் எழுதியும், செவிவழி கேட்டும் தங்களது கல்வியறிவை வளர்த்து வந்தனர். ஆனால் பின்னர் ஆங்கிலேயர்கள் நம் தமிழ்நாட்டிற்கு வந்து தமிழ் கற்று, எழுத்தறிந்து, தம்நாடு சென்று தமிழில் அச்செழுத்தை உண்டாக்கித் தமிழ் எழுத்தாலான புத்தகங்களை முதன் முதலில் நம் மக்கள் காணத் துணை செய்தார்கள். அதிலும், அலைபாடிக் கலை வளர்க்கும் அழகு நகராம் தரங்கம்பாடியில் பதினெட்டாம் நூற்ருண்டில் வாழ்ந்த டேனிஷ் மிஷன் தலைவர் ஸீகன்பால்கு ஐயர் அவர்கள் உள்ளத்தெழுந்த எண்ணமே, நமக்கு அச்சுக் கலையைத் தந்தது. அன்னார் தமிழ்த் தொண்டு போற்றற்குரிய தொன்றே.

பழந்தமிழ் இலக்கியங்களில், விஞ்ஞானக் கருத்துக்களும், நிலநூல் கருத்துக்களும், பிறவும் காணப்படினும், அவற்றை எளிய முறையில் அனைவருக்கும் ஏற்ப ஆக்கியருளிய பெருமையான காலம், ஆங்கிலேயர் வாழ்ந்த காலந்தான் என்ருல் எவரும் மறுக்கமாட்டார்கள். கணிதநூல், வானநூல் முதலியனவும் தமிழில். தமிழ் மக்களிடம் மிகுதியாகஉண்டு. அவற்றை ஒரு சிலரே உணர முடிந்தது-உணர்ந்திருந்தார்கள். ஆனால் இன்று ஆங்கிலேயர்களால் எளிதாக எவரும் அறிந்துகொள்ளும் வகையில் அந்நூல்கள் ஆக்கப் பெற்றுள்ளன. இது ஆங்கிலேயர் காலத்தில் தமிழ்நாட்டுக்கு ஏற்பட்ட பெரு நன்மைகளுள் ஒன்றேயாம்.

தமிழ்நாட்டில்இடைக்காலத்தில் பல்வேறு மூடநம்பிக்கைகளில் தங்களுடைய எண்ணத்தைச் செலவிட்டதோடுகாரணமின்றிப் பிரிந்து வாழ்ந்தும், பகுத்தறிவற்ற நிலையில், ஒன்றுபட்டு வாழாது பிறருக்கு அடிமையாக வாழ்ந்தும் அது காரணமாகப் பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலை, அரசியலில் தாழ்ந்த நிலை அன்ருட வாழ்விலும்கூடத் தந்நம்பிக்கையின்றித் தம்மைத்தாமே தாழ்த்திக் கொண்டு மக்கள் வாழ்ந்தார்கள். இந்த நிலைமை இன்று மாறி இருப்பதற்கு அடிப்படைக் காரணம் என்ன? சமுதாயம் என்ருல் என்ன? அதன் அமைப்பில் நாம் யார்? அதில் உண்டாகும் மாறுபாடு எதனைச் செய்யும்? என்பன போன்ற கருத்துக்களை உணர்ந்து வாழ்ந்த நாம், இடைக்காலத்து அவற்றை மறந்தோம்; வள்ளுவர் வாக்கை மறந்தோம். எனினும், ஆங்கிலேயர் காலத்தில் அவாகளுடைய சொல்- செயல்- கலந்து பழகும் முறை இவற்றைக்கண்ட பின்னரே நமது திருவள்ளுவரால் கூறப்பெற்ற சமுதாயம் எப்படி இருந்தது என்பதையும், பொருளாதாரத்தில் நாம் எப்படி இருக்கவேண்டும் என்பதையும் உணர முற்பட்டிருக்கிருேம்.

திருவள்ளுவரின் வாக்குப்படி "நயத்தக்க நாகரிகமே" வேண்டுபவராக நாம் சமுதாயத்தில் பழகவேண்டும். அவ்வாறு பழகும் முறை நம்மிடம் இருப்பினும் அதனை மறந்தோம்;

— 3ம் பக்கம் —

அக்டோபர்
முல்லை
விற்பனையாகிறது!
விலை
எட்டணா

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

அமீர்கான் ஆடம்பரப் பிரியன் என்பதை, அகிலாவுக்கு எடுத்துக் காட்டின.

பலநூறு கன்னியர்கள் அமீர்கானுக்கு ஆலவட்டம் விசிறிக்கிடந்தனர். அங்கே பேசாச்சிலையாகி விட்ட அகிலா, மெதுவாகத் தன் பார்வையை அமீர்கானின் பக்கம் திருப்பினுள். அவன் ஆணவமும், அகந்தையும் ஒருருக் கொண்டது போல் அமர்ந்திருந்தான். அவனது முகத்திலே எக்காளம் குடிகொண்டிருந்தது. அவனது கண்களிலே புலியின் வெறித்தன்மை நர்த்தனமாடிக்கொண்டிருந்தது. அவனது கொடூர முகத்தைப் பார்த்த அகிலாவின் உடலெல்லாம் நடுங்கியது.

அமீர்கான் ஆசனத்தை விட்டெழுந்து, அகிலாவின் அருகே வந்தான். பக்கத்தில் வந்து நின்றதும், கையால் சைகை செய்தான். தீப்பந்தத்தைக் கையிலேந்திய அலி ஒருவன் அருகே வந்து,அதன் ஒளி அவளது முகத்தில் படும்படி தீப்பந்தத்தைத் தூக்கிப்பிடித்தான். அமீர்கான் புன்னகை தவழ, அகிலாவின் முகத்தை மறைத்திருந்த திரையை விலக்கினுன். அவளது உடலெல்லாம் நாணத்தால் கூனிக் குறுகியது. கூண்டிலடைபட்ட கிளிபோல,அவள் தவித்தாள். தன்னுடைய பரிதாபகரமான நிலைமை எண்ணிய அவளது கண்கள், அருவியென நீரைப் பெருக்கின. கடினசித்தம் படைத்த அமீர்கானின் உள்ளம்கூட, அவளது கண்ணீரைக் கண்டதும் கரைந்துவிட்டது. உடனே அவளை அந்தப்புரத்திற்கு அழைத்துச் செல்லுமாறு உத்திரவிட்டு, வெளியே சென்றுவிட்டான்.

குற்றவாளியைப்போல குனிந்த தலையுடன், அவளுக்கென அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த அறைக்குள்ளே தோழிகள் வழிகாட்ட உள்ளே நுழைந்தாள். நேராகக் கட்டிலருகே சென்ற அகிலா முகத்தைத் திருப்பி, ‘‘எல்லோரும் போகலாம்’’ என்று கையால் சைகை செய்தாள். எல்லோரும் போனபின்பு, தனது உடைக்குள்ளே மறைத்து வைத்திருந்த, பட்டுத்துணியிலே சுற்றப்பட்டிருந்த கட்டாரியை, படுக்கையில் போடப்பட்டிருந்த விரிப்பின் அடியில் மறைத்து வைத்தாள். மேலே என்ன செய்வதென்று புரியாமல் சாளரத்தருகே சென்று அமர்ந்து, வானத்திலே ஜொலித்துக்கொண்டிருக்கும் நட்சத்திரக் கூட்டங்களைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். பிறகு படுக்கைக்குச் சென்றுள்.

கதவு தாளிடப்படாமலே இருந்தது. அகிலா படுக்கையில் படுத்தவாறே, என்னென்னவோ எண்ணிக்கொண்டிருந்தாள்.யாரோ தன் அறையை நோக்கி நடந்து வரும் காலடி ஓசைகேட்ட அவள், கதவையே நோக்கிக் கொண்டிருந்தாள். அலங்கார புருஷனுக அமீர்கான் உள்ளே நுழைந்து கதவைத் தாளிட்டான். தாளிட்டவாறே நின்றவன் முகத்தைமட்டும் திருப்பி, கட்டிலில் படுத்துக்கிடந்த அகிலாவைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். அவனது முகம் வினுடிக்குவினுடி வெவ்வேறு பாவங்களைத் தந்து கொண்டிருந்தது. அகிலாவின் அழகுத் தோற்றம், அவனது நெஞ்சத்திலே மோகனமான எண்ணங்களை உருவாக்கிக்கொண்டிருந்தது. பருவத்தின் தலைவாசலிலே நின்றுகொண்டிருந்த, அகிலாவின் உடல் வனப்பு அவனைக் கனவுலகத்துக்கு இழுத்துச்சென்றது. அவனது நாடி, நரம்புகளிலே பெருக்கெடுத் தோடிய இன்பப் பெரு வெள்ளத்தைத் தாங்கமுடியாதவனுக நிலைகலங்கி, மதுவருந்தியவன்போல தள்ளாடிக்கொண்டே கட்டிலை நெருங்கி, ‘‘அகிலா’’ என்று நெஞ்சத்து ஆசையெல்லாம் உதட்டிலே தேக்கிவைத்து, அன்பொழுக அழைத்தான். பாய்ந்துவரும் புலியைக் கண்டு மிரண்டோடும் புள்ளிமானைப் போல, கட்டிலின் மறுபக்கம் போய்த் தலைகுனிந்தவாறு நின்றுள் அகிலா. பலமுறை அமீர்கான் அழைத்தும், அவள் பதிலே பேசவில்லை. ‘‘அன்பே! உன் தந்தை சித்தூர் போய்ச் சுகமாகச் சேர்ந்திருப்பார்! அவரை எண்ணி எண்ணி, நீ ஏன் கலங்கிக்கொண்டிருக்கிறுய். அமீர்கானின் ஜனுனவுக்கு அழைக்கப்படமாட்டோமா என, ஆயிரமாயிரம் அணங்குகள் காத்துக்கிடப்பது நீ அறியாததல்லவே! அப்படி இருந்தும்கூட, நான் ஏன் உன்னை இங்கு வரவழைத்தேன்? நீ மட்டும் ‘சரி’ என்று ஒரே ஒரு வார்த்தை சொல்லிவிடு போதும்! என் இதய ராணியாக மட்டுமல்ல; பரந்து விரிந்து கிடக்கும் எனது ஜாகிருக்கும், நீ தான் அரசி! அந்தப்புரத்திலே இருக்கும் அத்தனை பெண்டிரையும் உனது ஆணைக்குப் பணிபுரியும் அடிமைகளாக மாற்றிவிடுகிறேன்’’ -சொல்லிவிட்டு அமீர்கான் அவளது மறுமொழிக்காகக் காத்து நின்றுன்.

அகிலா மனதைத் திடப்படுத்திக்கொண்டு ‘‘அமீர்! இப்போது என் மனநிலை ஒன்றும் சரியில்லை! என்னைக் குழப்பத்தில் ஆழ்த்திவிடாதீர்கள்! எதைப்பற்றியும் நான் தீர்மானமாக முடிவுசெய்ய அமைதி வேண்டும். ஆகவே என்னைத் தனித்திருக்க விட்டுப், போய்விடுங்கள்!’’ என்றுள்.

கெஞ்சும் குரலிலே அகிலா கூறியதும், மகுடியின் நாதத்திலே கட்டுண்ட நாகம்போல, ‘‘சரி! சரி! நன்ருகச் சிந்தித்து முடிவுசெய்! பிறகு வருகிறேன்’’ என்று கூறிவிட்டுப் போய்விட்டான் அவன்.

நாட்கள் வாரங்களாயின. வாரங்கள் மாதங்களாயின. ஆனுலும் அமீர்கானின் எண்ணம் நிறைவேறியதாகத் தெரியவில்லை. அந்தப்புரத்திலே இருந்த பெண்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டனர், எப்படி அமீர்கானின் வெறிக்கு அகிலாவால் தடைபோட முடிந்தது என்று. அந்தப் பெண்கள் எல்லாம் அவனைப் பார்க்கும்போது கேலிப் புன்னகையை உதிர்த்தனர். அது அவனது இதயத்தை வேலெனத் தாக்கிக் கொண்டிருந்தது.

நாளெல்லாம் அகிலாவின் எண்ணத்திலேயே மூழ்கிக் கிடந்த அமீர்கானின் இதயத்திலே போர்பற்றிய சிந்தனையும், எதிரிகளைப் பற்றிய எண்ணங்களும் இடம் பெறவே இல்லை.

இந்தச் சந்தர்ப்பத்தை ராணு மகாமகாதேவ சிம்மன் நன்ருகப் பயன்படுத்திக்கொண்டார். குதிரைப்படை ஒன்றைத் தயாரித்தார். ஐந்தாயிரம் வீரர்கள் கொண்ட அப்படையிலே,பலவகையான கொலைக்கருவிகள் ஏந்திய வீரர்கள் அணி அணியாகப்பிரிக்கப்பட்டனர். எரி அம்பு வீசமட்டும், ஆயிரம் வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. மலைச்சரிவிலே அமைந்திருக்கும் மொகலாயக் கோட்டையைத் திடீர் என்று தாக்கிக் கைப்பற்றிவிடவேண்டும், என்பதே ராணுவின் திட்டம். எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியான பின்பு,ராணுவின் குதிரைப்பட்டாளம் மாலைவேளையில் புறப்பட்டு விட்டது மொகலாயக் கோட்டையை நோக்கி. குதிரை வீரர்களின் நெஞ்சத்திலே பழிவாங்கும் எண்ணம் வேரூன்றிக் கிடந்தது. கோட்டை எப்போது பிடிபடும், எதிரிகள் எப்போது அகப்படுவர் என்று வீராவேசத்தோடு அப்படை போய்க்கொண்டிருந்தது. ஒவ்வொரு வீரனும் எதிரியின் ரத்தத்திலே வாளையும் ஈட்டியையும் கழுவவேண்டும் என்ற ஆவலில் போய்க்கொண்டிருந்தான்.

கோட்டையைத் தாக்கி துகள் துகளாக்கக் குதிரைப்படை வந்துகொண்டிருப்பதை அறியாத அமீர்கான், சோலையிலே பொழுதை உல்லாசமாகக் கழித்தான். திடீரென்று அகிலாவின் நினைவு வந்தது. தகவல் சொல்லிவிட்டு அகிலா இருக்கும் அந்தப்புரம் நோக்கிப் புறப்பட்டான். ஏனோ தெரியவில்லை கையிலே வாளையும் அவனை அறியாமல் எடுத்துக்கொண்டு போனுன்.

‘‘அகிலா’’ என ஆசை பொங்க அழைத்துக்கொண்டே உள்ளே நுழைந்தான் அமீர்கான். அவள் சாளரத்தருகே நின்றுகொண்டிருந்தாளே தவிர, இவன் உள்ளே நுழைந்தது தெரிந்தும், தெரியாதவள் போலவே இருந்தாள். அவனை அவமானப்படுத்தியது போலிருந்தது அது. துடிக்கும் இதயத்தை அடக்கிக்கொண்டு மெல்ல அவளருகே சென்று தோளைப் பிடித்தான். அதுவரையில் பேசாமல் நின்றுகொண்டிருந்த அகிலா, சாளரத்தின் திரையை இழுத்துவிட்டுத் திரும்பினுள். கண்களிலே ஆத்திரம் வெளிப்பட்டது. அவளது முகம் கோபத்தால் சிவந்துவிட்டது. ‘‘போ, வெளியே! இப்போதே போய்விடு!’’ என்று சப்தமிட்டாள்.

பொறுமையின் எல்லையைத் தாண்டிநின்ற அமீர்கானின் ரத்தம் கொதித்தது. அவனது வாழ்நாளில் அவன் எண்ணிய காரியம் எதுவும் நடைபெருமல் இருந்ததே கிடையாது. அதுவும் கேவலம் ஒரு பெண் தன் ஆசைக்குத் தடைபோட்டுக்கொண்டிருக்கிறுள் என்பதை எண்ணியதும் அவனது உள்ளம் குமுறியது. ஆத்திரமும், படபடப்பும் தொண்டையை அடைக்க, ‘‘அகிலா! இந்த அமீர்கான் யார் என்பதை, நீ இன்னும் புரிந்து கொள்ளவில்லை. எண்ணியதை உடனடியாகச் செய்து முடிக்கும் குணம் கொண்டவன் நான். மொகலாயப் பேரரசரின் ஜனுனவில் உள்ள அவரது மனைவி மக்கள்கூட அமீர்கானின் பெயரைக் கேட்டு நடுநடுங்குவர். அமீர்கானின் விருப்பத்தை நிறைவேற்ற அவர்கள் அடிமைகள் போலக் காத்திருக்கிருர்கள். இத்தனைநாள் உனக்குத் தொல்லை தரக்கூடாதே என்று நான் இருந்தேன். இன்று அப்படி இல்லை! இரண்டில் ஒன்று......’’ என்று கூறிய அவன், அவளை நெருங்கினுன்.

அவள் ஒருநாள் எதிர்பார்த்தது தான் இது. அன்று அவள் மகிழ்ச்சியின் மொத்த உருவாயிருந்தாள். காரணம், அவள் சாளரத்தின் வழியாகத் தனது தந்தையின் படைகள் வரும் தீப்பந்தங்களைக் கண்டது தான். எனவே, அவளது உறுதி அதிகப்பட்டது. அவள் உறுதியாகப் பேசினுள்.

‘‘அமீர்! இந்த அகிலா உனது [illegible]ல்கண்டு அஞ்சமாட்டாள்! மானம காக்க, மரணத்தையும் ஏற்கத் தயங்கமாட்டாள்’’

அமீர் அவளை எட்டிப் பிடித்துக்கொண்டான்.

‘‘கசக்கிப் பிழிந்தால்தான் ரோஜாவிலிருந்து அத்தர் பெறமுடியும்’ என்ற தத்துவம், இப்போதுதான் எனக்குப் புரிகிறது!’’ - முரட்டுத்தனமாக அவன் கூக்குரலிட்டான்.

அவளது உடலின் ஒவ்வொரு அணுவும், ‘மானம், மானம்!’ என்றே அடித்துக்கொண்டன. அகிலா திமிறினுள். அமீரோ அவளைக் கட்டிலில் பிடித்துத் தள்ளினுன்.

வேகமாக கட்டிலில் விழுந்த அவளது முதுகில், ஏதோ ஒரு பொருள் தட்டுப்பட்டது. அது அவள் மறைத்து வைத்திருந்த கட்டாரி தான்! நொடிப்பொழுதில் கட்டாரி இடம் மாறியது. அடுத்தகணம் அமீர்கானின் நெஞ்சில் பாய்ந்தது.

‘ஆ’ என்று அலறிய அமீர்கான் வழியும் ரத்தத்தைக்கூடக் கவனிக்காமல், தன் உடைவாளை எடுத்து வீசினுன். அந்த வாள் அவளது தொண்டையைத் தாக்கியது.அந்தக் காயத்தோடே எழுந்து நின்று ஒரு முறை பார்த்தாள் அகிலா. அவளது முகத்தில் நிம்மதிஒளிவிட்டது.

அடுத்து அவளை அறியாமல் அவளது கண்கள் சாளரத்தைநோக்கின. அங்கே அந்தக் கோட்டையே தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தது தெரிந்தது. ★

19-10-57 தேதி இதழிலிருந்து

வாழ்க்கையில் வந்த நண்பர்கள்

கண்ணதாசன்

எழுதும்

தொடர்கட்டுரை

[பல்வேறு ‘பிரகிருதி’களை வாழ்க்கையில் சந்திக்கிறேமே, அவர்கள் ஒவ்வொருவருக்கும்தான் எத்தனை விசித்திரமான குணங்கள்!

இந்தத் தொடர்கட்டுரையில் நண்பர்களின் பெயர்கள் வராது. குணங்கள் வரும்! ஏதாவது ஒரு குணசித்திரத்தைப் பார்த்து, இது தான்தான் என்று யாராவது மயங்கினுல், அதற்குக் கட்டுரையாளர் பொறுப்பாளியாக மாட்டார்.]



5. போட்டாளே வேலையற்றுப் போய்.

நாடும் மொழியும் நலம்பெற்று வாழ்ந்திடவும்
ஏடுபுகழ் காதல் இசைபெறவும்-பாடுபடும்
கூட்டத்தைக் கண்டிக்கும் குண்டரையும் நந்தமிழ்த்தாய்ப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—சி. சிவராமலிங்கம், சென்னை-1.

❁

வீட்டுக்கு விடேறி விலைகாசு கள்கொடுத்து
'ஓட்டு'க்கள் பெற்றரசு ஓச்சுகிறீர்-நீட்டுலகில்
நாட்டுக்குப் பேர்வைக்க நாதியிலைப் பெற்றும்மைப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

❁

புத்தமிழ்தம் போலினிக்கும் முத்தமிழ்த்தேன் இங்கிருக்க
எத்தர்தம் நஞ்சூற்றும் இந்தியினை—நத்தியே
நாட்டில் பரப்புதற்கு நண்ணுவனைத் தாயொருத்திப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—உமர், ஆரணி.

❁

கிள்ளை மொழியாளைக் கெண்டை விழியாளைக்
கொள்ளை சுகந்தரும் சோமளத்தை-உள்ளமே
பாட்டிசைத்து நாட்டுகையில் பாவையும் தாழ்ப்பாளைப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—எம். ஆறுமுகம், சென்னை-12.

❁

பள்ளிக்குச் சென்றுப் படிக்காமல் வீணாகத்
துள்ளித் திரியும் தடுக்கான—பிள்ளைக்குக்
காட்டாமல் நல்வழியை; கம்பால் முதுகினிலே
போட்டாளே வேலையற்றுப் போய்.

—து. சுப்பராயலு, பெரியகுளம்.

❁

பெற்றோரைப் பேணுமல் பேரின்பத் தாய்மொழியைச்
சற்றும் மதியாமல் தன்னறிவை-முற்றிலுமே
ஓட்டிவிட்டத் தோழனொருவனைப் பெற்றொருத்திப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—"தமிழடியான்", மேலப்பாளையம்.

❁

தான்பெற்ற செல்வத்தைத் தண்டமிழின் நாதத்தை;
மான்விழியாள் விற்றுளே! மற்றுமிவள்-வான்புகழும்
நாட்டில்வாழாமல் தன் நல்லுடலை ஆழ்கடலுள்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—சிவ. இளம்பரிதி, கரந்தை.

❁

கூர்மதிநூல் நோக்கக் குருடாகிப் பல்லோரின்
சிரறிவு கேட்கச் செவிடாகிப்-பேருரைகள்
ஆற்றுதற்கோ வாயூமை ஆதமக வைப்பெற்றுப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—மு. பா. வி. இளம்பரிதி, கரூர்.

❁

மாலையிலே சன்னலிடை மங்கை யொருத்தியின்
பாலைச் சிரிப்பால் பரவசிக்கும்-காலையிலே
கோட்டான்போல் அன்னைக் குறுக்கிட்டு வந்துதிரைப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—பெ. ஜெகன்னாதன், சென்னை-12.

❁

தாய்மொழியைப் பேய்க்குணத்தார் தாழ்வுசெயல் கண்டுவிட்டும்
வாய்திறந்து பேசாத வஞ்சகரைச்—சேய்களாய்
நாட்டிலே பெற்றெடுக்க, நங்கைப் படுக்கையைப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—அ. மாரிமுத்து, சென்னை-23.

நாட்டைக் கெடுத்திடுவார் நல்லரசு கொன்றிடுவார்
போட்டும் பனிலை பொற்கொடியே!-ஓட்டைத்தான்
மாட்டுக்குப் போடாதே என்றாலும் மாதவள்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—கடாரங்கொண்டான், தேவகோட்டை.

❁

நம்புவிளைக் காட்டினிலே காத்திருப்பாய் ஈதுறுதி
நம்பும் வகையுரைத்து நங்கையவள்-வம்புக்கு
வீட்டிற் கெதற்கோ "விரைந்திடுவீர்" என்றெழுதிப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—ஆர். என். நாராயணசாமி, சென்னை-2.

❁

கூடம் மெழுகவில்லை குப்பைதனைத் தள்ளவில்லை
பாடம் படித்தவளாம் பண்பில்லை—மாடமதைக்
கூட்டிடவே யில்லையவள் கூசாமல் கோலமதைப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—ஆர். கிருஷ்ணசாமி, தென்னம்பாக்கம்.

❁

சாதிக் கலகத்தால் செந்தமிழர் தன்னுள்ளே
மோதி மடிதல் முறையாமோ?-மேதினியில்
ஆட்டினமாய் ஐந்தறிவு கொண்டாரை அன்னை பெற்றுப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—சிவ. வைத்திலிங்கம், களக்காடு.

❁

சோற்றுக்கு முன்வருவாய்ச் சோம்பித் திரிந்திடுவாய்ப்
போற்றுதமிழ்க்(கு)ஊறென்றால் போயொளிவாய்;-தேற்றமிலாய்!
நாட்டிற்குப் பாராமாய் நன்றாய் உனைப்பெற்றுப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—தாம்பரக்கிழான், சென்னை-1.

❁

நாடோடி ஆள்கின்றான், நாயாய் அவன்பின்னால்
ஓடோடிச் சென்று உழைக்கின்றாய்-பீடுடைய
நாட்டின் புரவலனே! நற்றமிழ்த்தாய் இன்றுன்னைப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—ந. அலி, துறையூர்.

❁

தென்றல்சுவை யூட்டுந் திருத்தமிழின் சோலையிலே
மன்றிலிசை கூட்டிஎனை வாழ்வித்தும்—இன்றமிழ்த்தாய்ப்
பாட்டாலே பூவறியப் பண்ணுவித்தோர் மூலையிலே
போட்டாளே வேலையற்றுப் போய்.

—அ. ஆரோக்கியசாமி பிள்ளை, கடுக்காக்காடு.

❁

வீரமொடு காதலுக்கும் வித்தான செந்தமிழே
ஆரமுதத் தீம்புனலாய் ஆர்த்தோட -'பாரதத்தாய்'
கோட்டானும் இந்தியினைக் கோலோச்சச் செல்கவென
போட்டாளே வேலையற்றுப் போய்.

—புலமைப்பித்தன், ஒண்டிப்புதூர்.

❁

பெற்றதும் தென்னகம் பேணி வளர்த்ததும்
நற்றமிழே நன்னிலை நல்கியதும்—பொற்றமிழர்
நாட்டு நலங்கருதா மந்திரியர் பல்லோரைப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—ப. சின்னத்தம்பி, உடுமலைப்பேட்டை.

❁

கலையறியாக் கன்னி கருத்துணராப் பேதை
வலையதனை வீசிவிட்டாள் வந்து—நிலையுடையீர்!
மாட்டாதீர்! இந்தி அணங்கு வகையற்றுப்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—"மாவீரன்", சென்னை-21.

❁

அள்ளிப் பருகி அமுதத் தமிழோடு
துள்ளி விளையாடுந் தூயவனைக்-கொள்ளுதற்கு
நாட்டமொடு இந்திப்பெண் நண்ணி; கடைக்கண்ணும்
போட்டாளே வேலையற்றுப் போய்.

—"முத்தூரான்", பொள்ளாச்சி.

❁

கட்டழகி கற்பரசி காதலியும் காத்திருக்க
இட்டமுடன் வேசியரை ஏற்பரோ?-திட்டத்தால்
ஒட்டமாய் இந்திப்பெண் ஓடிவந்(து) ஆட்டமே
போட்டாளே வேலையற்றுப் போய்.

—அ. சாமிநாதன், கடுகூர்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ.எல்.எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு